Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 15.00


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 07 திங்கட்கிழமை (21.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



## மேற்குலக நாடுகள் கூட்டாக லிபியாவை நொறுக்குகின்றன

### ஏவுகணைத் தாக்குதலும் நடக்கிறது

(திரிபோலி)


லிபியா மீது அமெரிக்க, பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு படைகள் ஆகாய மற்றும் கடல்வழி மூலம் தாக்குதல்களை நடத்தி வருவதுடன் இந்நாடுகளின் மேலும் பல படைகள் லிபியாவை நோக்கி புறப்படத் தயாராகி வருகின்றன.

அமெரிக்க யுத்தக் கப்பல்களும் பிரித்தானிய நீர்மூழ்கிகளும் நேற்று முன்தினம் 120 டோமாஹாவ்க் ரக ஏவுகணைகளை ஏவியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

லிபியா மீதான முதல் தாக்குதலை பிரெஞ்சு யுத்த விமானமொன்று நேற்றுமுன்தினம் இரவு நடத்தியமை குறிப்பிடத்தக்கது. அதன்பின் அமெரிக்க, *(20ஆம் பக்கம் பார்க்க)*

# உள்ளூராட்சி அதிகாரங்களை தன்வசப்படுத்த அரசு திட்டம்!

### நாடாளுமன்றம் வருகிறது சட்டமூலம்



(கொழும்பு)

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கீழ் அபிவிருத்திப் பணிகளை கண்காணிப்பதற்கான மக்கள் சபைகளை உருவாக்குவதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் அதிகாரமும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மத்திய அரசிடம் இருந்து நிதி ஒதுக்கீடுகளைக் கோரும் அதிகாரமும் இச் சபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அந்தந்த பிரதேச மக்கள் சபையின் அனுமதியின்றி எந்தவொரு திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது எனவும் இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பாடசாலை அதிபர்கள், மதத்தலைவர்கள் மற்றும் அந்தந்த பிரமுகர்களைக்கொண்ட பல்லினப் பிரதிநிதித்துவத்தை இந்த சபை *(20ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதி மகிந்தவின் வெற்றி இந்தியாவை விழிப்படைய வைத்தது

### விக்கிலீக்ஸ் தகவல்

(சென்னை)

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் முடிபுகள், இந்தியா விழிப்படைவதற்கான அழைப்பு என இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்ததுடன் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை, போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பின்பற்றுதல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைத் தொடர்வதன் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தவும் பயன்படுத்த திட்டமிட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதரகத்தினால் அனுப்பப்பட்ட கேபிள் குறிப்பொன்றில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களை ஒரே நாளில் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை ஒரேநாளில் நடத்த தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இந்தத் தேர்தல்கள் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதங்களில் இடம்பெறும் எனத் தேர்தல் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இடைநிறுத்தப்பட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும் பிரதேசங்களைச் சார்ந்த 34 உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 34 உள்ளூராட்சி சபைகளினதும் நிர்வாகக் காலம் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி நிறைவடைகின்றன.

இது தவிர, *(20ஆம் பக்கம் பார்க்க)*

## நவநீதம்பிள்ளை ஏப்ரலில் வருகிறார்



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இலங்கை அரசாங்கமே நவநீதம்பிள்ளைக்கு கொழும்பு வருமாறு அழைப்பு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## பிரதமர் பதவிப் போட்டியால் ஆளும்கட்சிக்குள் முரண்பாடு வரும்!

### கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள பிரதமர் பதவி மாற்றம் காரணமாக ஆளும் கட்சி இரண்டாக உடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக கொழும்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தலையடுத்து பிரதமர் மற்றும் அமைச்சரவைப் பொறுப்புகளில் மாற்றம் கொண்டுவர ஜனாதிபதி ஏற்கெனவே உத்தேசித்திருந்தார். அதன் போது பிரதமர் பதவி பெரும்பாலும் ராஜபக்ஷ பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம் ஒப்படைக்கப்படும் என்றே தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆயினும் பிரதமர் பதவிக்கான போட்டியில் கடந்த சில வருடங்களாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் மட்டுமின்றி ஜோன் செனவிரத்ன போன்றோரும் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறான நிலையில் பிரதமர் பதவியை ராஜபக்ஷ *(20ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**
Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## எக்ஸ்போ யாழ்.நிறுவனத்தின் முகாமையாளரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

நல்லூரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.


எக்ஸ்போ விமான சேவை யாழ்ப்பாண நிறுவனத்தின் பொதுமுகாமையாளராக இருந்த கு.வசீகரன் என்பவரே காணாமல் போயுள்ளார்.

யாழ்.கச்சேரிப் பகுதியில் உள்ள எக்ஸ்போ விருந்தினர் விடுதியை பார்வையிட்டு வருவதாகச் சென்ற பின்னர் வசீகரன் இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# தமிழக சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்க வைகோ முடிவு

## சுயமரியாதையை இழக்க முடியாதெனவும் அறிவிப்பு



(சென்னை)

**தமிழகத்தில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது. சுயமரியாதையை இழந்து, அ.தி.மு.க. தரும் தொகுதிகளைப் பெற்று தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்றும், தற்போதைய சூழலில் மூன்றாம் அணி அமைக்க விரும்பவில்லை என்றும் ம.தி.மு.க. அறிவித்துள்ளது.**

என்ன முடிபெடுப்பார் என்ற கேள்வி தமிழக அரசியல் அரங்கில் பரபரப்பாக சுழன்று வருகிறது.

ம.தி.மு.கவின் இந்த நிலைப்பாட்டை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளதாக சென்னை செய்திகள் தெரிவிக்கின்றன. அதேநேரம் இம்முடிபு குறித்து அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, மதிமுக பொதுச் செயலாளர் வைகோவிற்கு உருக்கமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ந-5)

நேற்று விடிய விடிய இடம்பெற்ற உயர் மட்ட குழு மற்றும் மாவட்டச் செயலாளர்கள் குழு ஆகியவற்றின் அவசரக் கூட்டங்களின் பின்னரே இம்முடிபை எடுத்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

2011 தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணி அமைக்கத் தொடங்கியபோதே ஐந்து ஆண்டுகளாக அ.தி.மு.க. அணியில் இருக்கும் ம.தி.மு.க. முதலில் 35தொகுதிகளை கேட்டது. அ.தி.மு.க. தரப்பு மறுக்கவே பின்னர் 21 தொகுதிகளைக் கேட்டது. அதற்கும் மறுப்புத் தெரிவித்த அ.தி.மு.க. 7 அல்லது 8 தொகுதிகளை வேண்டுமானால் தருகிறோம் என்றது. இதனால் கௌரவமான தொகுதிகளை கொடுத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை என்று ம.தி.மு.க. தெரிவித்துவிட்டு பேச்சுவார்த்தைகளில் பங்குபெறாமல் தவிர்த்து வந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ம.தி.மு.க.வின் உயர்மட்டக் குழு கூடியவேளையில் அதிமுகவின் சார்பில் ஓ.பன்னீர்செல்வமும், செங்கோட்டையனும் மீண்டும் வைகோவுடன் பேசிவிட்டுச் சென்றனர். இருப்பினும் அ.தி.மு.க. குறைந்த எண்ணிக்கையிலான தொகுதிகளையே தர முன்வந்ததால் பேச்சுவார்த்தைகளில் இழுபறி ஏற்பட்டது.

பேச்சுவார்த்தையில் தம்மை நடத்திய விதமும், தொகுதிகள் ஒதுக்கீடு விவகாரமும் மதிமுகவினரை கலங்கச் செய்திருந்த நிலையில் சுயமரியாதையை இழந்து தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்ற முடிபை ம.தி.மு.க. எடுத்துள்ளது.

வைகோவின் இந்த முடிபு அரசியல் அரங்கில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளதோடு பல விவாதங்களையும் தோற்றுவித்துள்ளது. வைகோவின் இந்த முடிபால் அ.தி.மு.கவுக்கு ஆதரவான நிலையை எடுத்த நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானும்

## மட்டு.வில் நிலவெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு அண்மையில் கடந்த சனிக்கிழமை நிலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வெடிப்பின் ஊடாக நீர் வந்தவண்ணமுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அடி மட்டத்திலிருந்து நீர் மேல் மட்டத்திற்கு வந்தமையினாலேயே குறித்த வெடிப்பு இடம் பெற்றுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

பூரண சந்திரனின் தாக்கத்தினால் அடி மட்டத்திலிருந்து நீர் மேல் மட்டத்திற்கு வந்திருக்கலாம் என அனர்த்த முகாமைத்துவ நிலைய பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்த நிலைமை தொடர்பாக புவி மற்றும் சுரங்க ஆராய்ச்சி சபை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள குறித்த பிரதேசத்திற்கு புவி ஆராய்ச்சியாளரொருவர் அனுப்பப்பட்டுள்ளதாக புவி மற்றும் சுரங்க ஆராய்ச்சி சபையின் தலைவர் டாக்டர் என்.பி.விஜேயானந்த தெரிவித்தார்.

குறித்த சம்பவம் விரும்பத் தகாத அனர்த்தம் எதனையும் ஏற்படுத்தாது என அவர் குறிப்பிட்டார்.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள பாரிய பூமியதிர்வுக்கு பின்னர் குறித்த சம்பவம் ஏற்பட்டுள்ளமையால் பொதுமக்கள் கவனமாக இருக்குமாறு டாக்டர் என்.பி.விஜேயானந்த மேலும் தெரிவித்தார். (ந-5)

# அன்புச் சகோதரியின் மதிப்பு என்றென்றும் நிலைத்திருக்கும்

## வைகோவுக்கு ஜெயா கடிதம்



(சென்னை)

**சட்டசபைத் தேர்தல் தொடர்பாக ம.தி.மு.கவின் நிலைப்பாட்டை எடுக்கும் உரிமை தங்களுக்கு உள்ளது. எப்படியிருந்தாலும் உங்கள் அன்புச் சகோதரியின் அன்பும் நன்மதிப்பும் எப்போதும் நிலைத்திருக்குமென அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதா ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலைப் புறக்கணிப்பது என ம.தி.மு.கவின் உயர்நிலைக் கூட்டத்தில் முடிபெடுக்கப்பட்ட பின்னணியில் ஜெயலலிதா இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவது இல்லை என்ற ம.தி.மு.கவின் முடிபும் வைகோவின் அறிவிப்பும் எனக்குப் பெரும் மனவேதனை தருகின்றது.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் 2006ஆம் ஆண்டு முதலே அங்கம் வகித்து வருகிறது ம.தி.மு.க.

நடைபெறவுள்ள 2011 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பல கட்சிகள் இடம்பெற்றிருப்பதை முதிர்ந்த அரசியல்வாதியான தாங்கள் நன்கு அறிவீர்கள்.

வருகிற தேர்தலில் தாங்கள் கேட்டுக் கொண்டபடி 21தொகுதிகளை ஒதுக்க முடியாது என்ற சூழல் உள்ளது. எனவே 12தொகுதிகளை ஒதுக்குவதாக கட்சியின் பொருளாளர் ஓ.பன்னீர்செல்வம், அமைப்புச் செயலாளர் கே.ஏ.செங்கோட்டையன் மூலம் தகவல் சொல்லி அனுப்பியிருந்தேன்.

அவர்களும் தங்களை நேரில் சந்தித்து இதைத் தெரிவித்தார்கள். இருப்பினும் சட்டசபைத் தேர்தலை ம.தி.மு.க. புறக்கணிக்கும் என்று அறிவித்திருப்பது மிகுந்த மனவருத்தத்தைத் தருகிறது என இக்கடிதத்தில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொகுதிகள் ஒதுக்கீடு விடயத்தில் வைகோ நடத்தப்பட்ட விதம் தொடர்பாக ஜெயலலிதா மீது பெரும் அதிருப்தி கிளம்பியுள்ள நிலையிலேயே அதனைத் தணிக்கும் நோக்குடன் இக்கடிதத்தை அவர் எழுதியிருப்பதாகக் கருதப்படுகிறது.

வைகோவும் அவரது ம.தி.மு.க. தொண்டர்களும் இல்லாமல் இத்தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதில் அ.தி.மு.க. பெரும் சிக்கலை எதிர்கொள்ளும் என்றே பரவலாகக் கருதப்படுகிறது. (ந-5)

**சாரதி தேவை**
அனுபவமும், நல்லொழுக்கமும் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட சாரதி தேவை. கோப்பாய் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0775430190
(4092)


**ஆசிரியர்கள் தேவை**
கைதடியில் அமைந்துள்ள பிரத்தியேக கல்வி நிலையத்திற்கு 1-11 வரை அனைத்துப் பாடங்களிற்கும் ஆசிரியர்கள் தேவை (ஆண்/பெண்), நிலையத்திற்கான செயலாளரும் தேவை (பெண்/ஆண்).
தொடர்பு நேரம்- 4.00 மாலை
இடம் திகதி -22/03/2011
THIVI MATHS CENTER
கைதடி கிழக்கு,கைதடி
T.P(No): 0776624396
(4093)

**வீடு/ அறைகள் வாடகைக்கு**
6அறைகள், 2குளியலறைகள், 2 சமையலறை, 2ஹோல்கள், வாகன தரிப்பிட வசதியுடன், இல. 121, பற்றிக்ஸ் றோட்டில் பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் மேல் மாடி வீடும் (நிறுவனங்களுக்கு பொருத்தமானது) கல்வியங்காடு, இருபாலையில் அறைகளும் வாடகைக்குண்டு. (4094)
தொடர்புகளுக்கு: 0779496985

**Computer Mega Sale**
2011 மார்ச் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல் லூரியில், 22,23ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் இடம்பெறும். அரச உத்தி யோகத்தர்கள், மாணவர்களு க்கு விசேட விலை.
மேலதிக தொடர்பு: 0718570609,0759997700.
(4058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் வெற்றியுடன் விடைபெற்றது சிம்பாவே



(கொல்கத்தா)

கென்யா அணியுடனான லீக் போட்டியில் சிம்பாவே அணி 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றிபெற்றது.

இதன் மூலம் கென்யா அணி உலகக் கிண்ண தொடரில் தான் விளையாடிய 6 போட்டிகளிலும் தோல்வியடைந்து விடைபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற 41ஆவது லீக் போட்டியில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த கென்யா- சிம்பாவே அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு ஆரம்பத்தில் சாகுப்வா 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் அடுத்து களமிறங்கிய தைபு நிதானமாக ஆடி ஆறுதல் அளித்தார்.

மறுமுனையில் ஆரம்ப வீரர் ரெய்லர் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிம்பாவே அணி 9.4 ஓவர்களில் 36 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் தைபுவுடன் இணைந்த சிபண்டா அதிரடியாக ஆட சிம்பாவே அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் சிபண்டா 54 பந்துகளில் அரைச் சதம் அடிக்க சிம்பாவே அணி 22.5 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தாண்டியது.

இந்த ஜோடி 3 ஆவது விக்கெட்டுக்காக 110 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தபோது சிபண்டா 57 பந்துகளில் (7 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஏர்வின் சிறப்பாக ஆட மறுமுனையில் தைபு 68 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார்.

எனினும் தைபு 74 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக ஏர்வினுடன் இணைந்த சிகும்புரா அதிரடியாக ஆட சிம்பாவே அணி 39.4 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் ஏர்வின் 46 பந்துகளில் அரைச்சதம் பெற்றார். இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது அணித்தலைவர் சிகும்புரா 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து ஏர்வின் 54 பந்துகளில் (9 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 66 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் லாம்ப்-உற்சயா ஜோடி தமது பங்கிற்கு அதிரடி காட்ட சிம்பாவே அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 308 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் உற்சயா 6 பந்துகளில் (3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 19 ஓட்டங்களையும் லாம்ப் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஓற்ரியானோ 2 விக்கெட்டுக்களையும் ஒங்கொண்டா, ஒடியாம்போ, நிகோஷி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 309 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கென்ய அணிக்கு ஆரம்பம் முதலே விக்கெட்டுக்கள் சரிந்தன.

ஆரம்ப வீரர் டேவிட் ஒபுயா பூச்சியத்துடனும் அடுத்து வந்த கொலின் ஒபுயா ஒரு ஓட்டத்துடனும் அணித்தலைவர் ரிக்கோலோ 10, மிர்ஷா 4, ஒபண்டா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கென்ய அணி 11.4 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

பின்வரிசையில் ஒடியாம்போ போராடிய போதும் கென்யா அணி 36 ஓவர்களில் 147 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் சிம்பாவே அணி 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரில் 2 வெற்றிகளுடன் ஆறுதலடைந்து உலகக் கிண்ணத் திலிருந்து விடைபெற்றது. துடுப்பாட்டத்தில் ஒடியாம்போ ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பிரைஸ், லாம்ப், கிரீமர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மோபு, உற்சயா தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் சிம்பாவே அணியின் ஏர்வின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இப்போட்டியில் தோல்வியடைந்த கென்யா அணி தொடரில் தான் விளையாடிய 6 போட்டிகளிலும் தோல்வியடைந்தது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?
1. ........................ 2. ........................
2. ........................ 4. ........................
பெயர்: ..........................
முகவரி: ..........................
..........................
தொ.பே: ..........................
தே.அ.அ.இல: ..........................
சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி?
இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான காலிறுதிப் போட்டியில் வெற்றிபெறுவது யார்?
..........................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 23.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..........................
முகவரி:- ..........................
..........................
தொ.பே:- ..........................
தே.அ.அ.இல:- ..........................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

உலகக்கிண்ண கிரிக்கெட்-2011
சம்பியனாகும் நாடு?..........................
தொடர் நாயகன் விருது யாருக்கு?..........................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி
28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதியாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.
பெயர்..........................
முகவரி..........................
தொலைபேசி..........................
தே.அ.அ.இல..........................
'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
இன்னும் பல பரிசுகள்
Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com
SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592
PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் திருமுறைப் பண்ணிசைப் பரீட்சைப் பாடவிதானத்திற்கு அமைவாக பண்ணிசை வகுப்பு மாணவர்களுக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் சைவ ஆலயங்களில் பஞ்சபுராணம், பன்னிரு திருமுறைகள் ஓதுவதற்கான பயிற்சி வகுப்பும் வயது வேறுபாடின்றி நடைபெறவுள்ளது.

இதற்கானபயிற்சிகளை துறைசை ஆதீன திருமுறைத் .தோன்றல், கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் வழங்கவுள்ளார்..

எனவே இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் வேதாந்த மடம், இல. 18, குமாரசாமி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் தமது பதிவினை மேற்கொள்ளலாமென யாழ்.சிவகுருநாத குருபீட எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியா சாகரர் சுவாமிகள் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்வி அமைச்சின் பௌர்ணமி கலைவிழா தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# கூட்டம்

இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டின் ஊடாக மனிதநேயத்தை சாத்தியமாக்கல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரியகுளம் வீதியிலுள்ள நாகவிகாரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)

# வீதியைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை

## பக்தர்கள் பெரும் அசௌகரியம்

மந்திகையிலிருந்து வல்லிபுரக் கோயிலுக்குச்செல்லும்பிரதான வீதி பல வருட காலமாக புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

இவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் மற்றும் வல்லிபுர ஆழ்வார் பக்தர்கள் பல இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மேற்படி விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-19)

# சுயதொழில் உதவு தொகை பெறுவோர் விபரம்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஊடாக சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்த 21 பயனாளிகளுக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுயதொழில் உதவு தொகைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு,

த.கமலாதேவி (பருத்தித்துறை), ர.யோகேஸ்வரி (பருத்தித்துறை), ம.ஜானகி (பருத்தித்துறை), கி.சின்னமணி (பருத்தித்துறை), கி.செல்வரத்தினம் (புலோலி வடகிழக்கு), பா.சாந்தாதேவி (சுப்பர்மடம், பருத்தித்துறை), சு.மேரி திரேசா (4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை), தி.ஜெயந்தி (பன்னக்கட்டை, பருத்தித்துறை), க.கமலாதேவி (பெரிய கடற்கரை, தொண்டைமானாறு), சு.இலங்கேஸ்வரி (கற்கோவளம்), ர.சுசிலாதேவி (2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), சு.பேரின்பராணி (மயிலியதனை, கெருடாவில்), வே.கமலாதேவி (வட்டுவதை, புலோலி தென்மேற்கு), கு.மகேஸ்வரி (சுயிட்டிபுலம், அல்வாய் மேற்கு), தா.பழனிவேல் (ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை), செ.லீலாதேவி (செட்டியூர், தொண்டைமானாறு), றொ. செல்லம்கொடி (நெடியகாடு, வல்வெட்டித் துறை), லி.சுமதி சவனாய் (புலோலி வடக்கு), தெ.பரமேஸ்வரி (வத்தனை, புலோலி மேற்கு), எஸ்.லூர்த்துமலர் (தேவமாதா கோவிலடி, பருத்தித்துறை), ச.செல்வமலர் (ஓடக்கரை, பருத்தித்துறை) (ஸ்ரீ-3-35)

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலய பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**பட்மின்ரன் (19 வயது ஆண்)**

யா/ஹாட்லிக் கல்லூரி, யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/புற்றளை ம.வி.

**பட்மின்ரன் (19 வயது பெண்)**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**துடுப்பாட்டம் (19 வயது ஆண்)**

யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், யா/ஹாட்லிக் கல்லூரி

**துடுப்பாட்டம் (19 வயது பெண்)**

யா/நெல்லியடி ம.ம.வி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**கரப்பந்தாட்டம் (15 வயது ஆண்)**

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, யா/புற்றளை ம.வி, யா/ஹாட்லிக் கல்லூரி

**கரப்பந்தாட்டம் (15 வயது பெண்)**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/சென்தோமஸ், றோ.க.த. பெண்கள் பாடசாலை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**கரப்பந்தாட்டம் (17 வயது ஆண்)**

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, யா/தொண்டைமானாறு வீரகத்தி ம.வி., யா/சிதம்பராக் கல்லூரி

**கரப்பந்தாட்டம் (17 வயது பெண்)**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/சென்தோமஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை, யா/நெல்லியடி ம.ம.வி.

**கரப்பந்தாட்டம் (19 வயது ஆண்)**

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, யா/வல்வை சிவகுரு வித்தியாலயம், யா/ஹாட்லிக் கல்லூரி

**கரப்பந்தாட்டம் (19 வயது பெண்)**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/வல்வை மகளிர் ம.வி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (ஸ்ரீ-3-19)

# மனித உரிமைகள் நிலையத்தால் இலவச சட்ட சேவைகள்

(கொழும்புத்துறை)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் மற்றும் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மனித உரிமைகள் நிலையத்தால் இலவச சட்ட சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தாபரிப்பு வழக்கு, விவாகரத்து, கற்பழிப்பு முதலான குற்றவியல் வழக்குகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்காக மேற்படி நிலையத்தின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வாதாடி வருகின்றனர்.

சமூகத்தில் பெண்கள் விழிப்புணர்வு அடையும் நோக்கில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் நடாத்தி வருகின்றனர்.

அந்தவகையில் மாதர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல், மனித உரிமைகள் நிலையத்தின் மேற்பார்வையாளர் த.சண்முகநாதன் தலைமையில் நேற்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சட்டத்தரணிகளான ஏ.எஸ்.அற்புதராஜா, வி.எஸ்.நிறஞ்சன் ஆகியோர் சட்ட விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்கள்.

குறிப்பாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் ஊரெழு பலாலி வீதியிலுள்ள மனித உரிமைகள் நிலையத்துடன் தொடர்புகொண்டு இலவசமாகச் சட்ட நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என அதன் இணைப்பாளர் செல்வி எஸ்.ராஜரட்ணம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

# பொதுக்கூட்டங்கள்

(பொலிகண்டி)

பொலிகண்டி கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் தலைவர் வீ.சிவஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த ஆண்டறிக்கை சமர்ப்பித்தலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர், பொலிகண்டி கிழக்கு கிராம அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைத்து விவசாயிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-48)

★★★★★

பொலிகண்டி மேற்கு கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பொலிகண்டி மேற்கு மாதர் சங்க மண்டபத்தில் தலைவர் பா.குழந்தை வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஆண்டறிக்கை சமர்ப்பித்தலும் இடம்பெறவுள்ளதுடன் கமநலசேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் மற்றும் பொலிகண்டி மேற்கு கிராம அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே அனைத்து விவசாயிகளையும் தவறாது சமுகம் தருமாறு தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-48)

★★★★★

பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கப் பொதுமண்டபத்தில் தலைவர் செ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் ஆண்டறிக்கை சமர்ப்பித்தலும் இடம்பெறும்.

எனவே அனைத்துக் கடற்றொழிலாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலாளர் ஆ.ஜெயரட்ணகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-48)

# மணவாளக்கோலப் பெருவிழா

(பொலிகண்டி)

திக்கம் ஊகோடை நீர்வளச் சேனை நாச்சிமார் அம்பாள் ஆலய மணவாளக் கோலப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து பூசை ஆராதனை, மகேஸ்வர பூசை, பாற்காவடி, கரகம் எடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)







பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இளைஞர், யுவதிகளுக்கு வாழை நாரிலிருந்து பெறுமதியான பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிப் பட்டறை நேற்று திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமானது.

இதில் இந்தியாவின் வடக்கு, கிழக்கு விஞ்ஞான தொழினுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ரி.கோஸ்வாமி உரையாற்றுவதையும்பயிற்சி பெற வந்தவர்கள் அமர்ந்திருப்பதையும் உற்பத்திப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நாட்காட்டி

உலகத்தில் முதன்முதலில் நாட்காட்டியை உருவாக்கியவர்கள் யார் தெரியுமா? எகிப்தியர்கள்தான்.

5000 ஆண்டுகளுக்கு முன்பே இதை உருவாக்கினார்கள்.

வருடத்திற்கு 365 1/4 நாட்கள் என்று துல்லியமாக கணக்கிட்டு பயன்படுத்திவந்தார்கள்.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் எகிப்தை ஆண்ட மூன்றாம் டாமிலா என்ன செய்தார் என்றால்... வருடத்திற்கு 1/4 நாள் மிகுதியாக இருக்கிறது அல்லவா... அதை சரியாக்குவதற்காக நான்கு வருடத்திற்கு ஒரு தடவை ஒரு நாளை சேர்த்துக் கொள்ள முடிவு செய்தார்.

அவர் செய்த திருத்தம் இன்றுவரை நீடிக்கிறது. அதன்படி நான்காண்டுகளுக்கு ஒரு தடவை வருடத்திற்கு 366 நாட்கள் வருகிறது. அதை லீப் வருடம் என்கிறோம்.

ஆரம்பத்தில் நாட்காட்டியை எகிப்தியர்கள் என்ன பெயர் வைத்திருந்தார்கள் என்று தெரியவில்லை.

ஆங்கிலத்தில் இதற்கு கலண்டர் என்று சொல்கிறோம். 'காலண்டசு' என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தான் இது வந்தது. அவ்வார்த்தைக்கு 'மாதத்தின் முதல் நாள்' என்று அர்த்தம்.

அந்தக்காலத்தில் நாட்காட்டிகளைக் கணக்கிடுவதில் ரோமானியர்களிடையே பெரிய குழப்பம் இருந்து வந்தது.

மதத்தலைவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு ஏதேதோ பண்ணிக்கொண்டிருந்தார்களாம்.

ரோமானியப் பேரரசர் ஜூலியஸ் சீசர் (கி.மு101-44) தான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் எகிப்தியர்களின் கணக்கைப் பின்பற்றி வருடத்திற்கு 365 நாட்கள். நான்கு வருடத்துக்கு ஒருதடவை366 நாட்கள் என்று முடிவு செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார். சீசரின் நாட்காட்டியிலும் சில குறைகள் உண்டென்று தெரிந்ததாம்.

அதைச் சீராக்குவதற்காக 13 ஆம் இரிகோரி என்ற போப்பாண்டவர் 2 திருத்தங்கள் செய்தார்.

அதாவது முதலில் 1582 ஆம் ஆண்டில் 10 நாளைக் குறைத்தார். ஒக்டோபர் 4 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு அடுத்தநாள் ஒக்டோபர் 15 வெள்ளிக்கிழமை என்று மாற்றினார்.

அதனால் அந்த வருடத்துக்கு 355 நாட்கள் தான் 400 ஆண்டுகளுக்கு ஒரு தடவை 3 நாட்களை குறைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

சீசரின் நாட்காட்டிப்படி 2 சுழிகளால் முடியும் ஆண்டுகள் (1200, 1300) லீப் ஆண்டுகள். புதிய திட்டத்தின் படி சுழிகளுக்கு முன்னால் உள்ள எண் நான்கால் மீதியில்லாமல் வகுக்கப்பட்டால் மட்டுமே லீப் ஆண்டு. உதாரணத்துக்கு 1200, 1600, 2000. இதை உலக நாடுகள் முழுவதும் ஒரே சமயத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. ரோம், ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகள் ஏற்றுக் கொண்டன.

அங்கே 4.10.1582 வியாழனுக்கு அடுத்த நாள் 15.10.1582 வெள்ளிக்கிழமை என்று மாறியது. பிரான்சில் 9.12.1582 க்கு அடுத்த நாள் 20.12.1582 என்று மாற்றினார்கள்.

இப்படி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதம். இங்கிலாந்தும் சுவீடனும் 1752 வரை பழைய நாட்காட்டியையே பின்பற்றி வந்தன. இதனால் 11 நாட்கள் குறைந்து விட்டது. இங்கிலாந்தில் 2.9.1752 இற்கு அடுத்த நாள் 14.9.1752 என்று அறிவிக்கப்பட்டபோது எதிர்பார்ப்பாளர் சிலர் "எங்கள் 11 நாட்களைத் திருப்பிக்கொடு" என்று சத்தம் போட்டுக் கொண்டு தெருத் தெருவாக ஊர்வலம் நடத்தினார்களாம்.

20 ஆம் நூற்றாண்டுவரை சமாளித்துக் கொண்டு வந்தநாடுகளும் உண்டு.

கிரேக்கம், பல்கேரியா, யூகொஸ்லாவியா, ரஷ்யா எல்லாம் அப்படியே காலம் கடத்திக் கொண்டு வந்தன. அதனால் 13 நாட்களைக் குறைக்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது.

அதனால்தான் 26.10.1917இல் நடைபெற்ற ரஷ்ய ஒக்டோபர் புரட்சியின் நினைவுநாள் (நவம்பரில்(7/11) கொண்டாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.13 நாட்கள் குறைந்ததனால் 24.10.1918 க்கு அடுத்த நாள் 7.11.1918 என ஆகிவிட்டது.

பின்னர் உலக நாடுகள் அனைத்தும் ஒரே நாட்காட்டியை ஏற்றுக் கொண்டன.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்

## தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் பிரகடனத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் தி.மு.க.கட்சியின் தேர்தல் பிரகடனம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் பிரதானமாக இந்திய மீனவர்களின் பாதுகாப்பு குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க.கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் தமிழ்நாட்டில் ஏழைகளின் நல்வாழ்விற்கான ஏராளமான திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மொத்தம் 64 பக்கங்களில் அதன் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் 500 மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

எனவே யாழ். வலயத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் . வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 1.21 மணிவரை நடைபெறும்.

இதனை முன்னிட்டு நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எண்ணெய்காப்பு இடம்பெறும். (ஸ்ரீ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு, இன்று திங்கட்கிழமை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் நாளை செவ்வாய்க்கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை, உயர் பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 |
| தக்காளி | 50 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 120 | 180 | 200 |
| பூசணி | 50 | 60 | 70 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80-100 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 |
| பயற்றங்காய் | 150 | 130 | 160 |
| லீக்ஸ் | 120-150 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | - | 180 | 180 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 500 |
| போஞ்சி | 80-100 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

## இராசி பலன்

*21.03.2011*
*(பங்குனி 07,திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*துதியை முன்னிரவு 7.46மணிவரை*
*அத்தம் காலை 7.27மணிவரை*
*சித்திரை பின்னிரவு 5.54 மணிவரை*
*இராகுகாலம் 7.47-9.17 மணிவரை*
*சுப நேரம் 12.17-1.47 மணிவரை*
*முதலாவது பங்குனித் திங்கள்*

**மேடம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாபநோக்கோடு பழகியவர்களை இனம் காண்பீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாக அம்பிகையை வழிபடவேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும், பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள்.

**மிதுனம்** வளர்ச்சி அதிகரிக்க பார்வதியை வழிபடவேண்டிய நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்,செய்தகாரியங்களில் எதிர்பாராத வகையில் வெற்றிஏற்படலாம்.

**கடகம்** உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்திற்கு மதிப்பளிக்க முன்வருவர், சுவாரஸ்யமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பிரயாண அனுகூலமுண்டு.

**சிங்கம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், வார்த்தைகளால் பிறரைக்கவர்வீர்கள், புதிய திட்டங்களை வகுப்பீர்கள், பிறவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

**கன்னி** மகிழ்ச்சி பெருக சக்தியை வழிபடவேண்டிய நாள், வேலைச் சுமை அதிகரித்தாலும் மதிப்பு உயரும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்து செலவுகளால் திணறுவீர்கள், தொழில் நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம்.

**விருச்சிகம்** வங்கிச்சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், புதிய தொழில் முயற்சிக்கு புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், கௌரவமான நாள்.

**தனுசு** கோயில் வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், தவறிய பொருட்கள் மீண்டும் கிடைக்கலாம், பிரயாணங்களால் நன்மையுண்டு, அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும்.

**கும்பம்** மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும், வேலைகள் தாமதமாகலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம்.பிரயாணங்களில் விழிப்புணர்வு தேவை.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், மாமன் மைத்துனன் வழியில் இனிய செய்திகள் வந்து சேரும், மாலை நேரம் பொருட்சேர்க்கையுண்டு, கற்பனை மிகுதியுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்




(மூலம், பூராடம், உத்தராடம், முதலாம்பாதம்)

**எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்!**

***வியக்கும் வாழ்வமைய விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டுமென்று சொல்லும் தனுசு இராசி நேயர்களே!***

நாவன்மையால் நல்ல பெயர் எடுத்துக் கொள்வீர்கள். அடுத்தவர்கள் விவகாரத்தில் அநாவசியமாக மூக்கை நுழைக்க மாட்டீர்கள். அவர்களாகச் சொன்னால் அரிய ஆலோசனைகளை எடுத்துச் சொல்வீர்கள். முன்கோபத்தின் பிடியில் இருக்கும் நீங்கள், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் பொழுது, சாந்த ரூபியாக மாறி விடுவீர்கள்.

உங்களுக்கு இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பகல் இரவாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் மாதமாகவே அமையப் போகிறது. மாதத் தொடக்கத்தில் குரு பலம்பெற்று விளங்குகிறார். இராசிநாதன் பலம்பெறும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். தொல்லைகள் அகலும். எதிரிகள் உதிரிகளாவர். இலாப நோக்கத்தோடு பழகியவர்கள் விலகுவர்.

ஜென்ம இராகு இதுவரை உங்களுக்கு கொடுத்த சிக்கல்களில் இருந்தும், சிரமங்களில் இருந்தும் விடுபட வைக்கப் போகிறது. இன்னும் சில நாட்களில் குருப்பெயர்ச்சி மற்றும் இராகு- கேது பெயர்ச்சியும் நடைபெறப்போகிறது. அவற்றின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறப்போகிறீர்கள். மாதத் தொடக்கத்தில் அஷ்டமாதிபதி சந்திரனுடன் கேது இணைந்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் , ஒரு சில மனக்கசப்பு தரும் சம்பவங்களும் இம் மாதம் ஏற்படலாம். ஆனால் , கௌரவ பாதிப்பு ஏற்படாது.

வியாழன் தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வதன்மூலமும், திசைமாறிய தென்முகக் கடவுள் வீற்றிருந்து அருள் வழங்கும் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பதன் மூலமும், நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நாளை மறுதினம் கும்ப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 6 க்கு அதிபதியாகவும் இலாபாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது, மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டு முயற்சிக்கு புதிய நபர்கள் வழிகாட்டுவர். பூமி யோகம் உண்டு. சகோதர வழி சச்சரவுகள் அகலும். சுபவிரயங்கள் உருவாகும் நேரம் இது என்பதால், குழந்தைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள்.

உங்கள் இராசிக்கு 5,12 க்கும் அதிபதியானவர் செவ்வாய். அவர் வாகன யோகத்தையும், சுகங்களையும் வழங்கும் இடத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் சஞ்ரிக்கப் போகிறார். எனவே, மேலும் சிறந்த பலன்களைக் காணப்போகிறீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். சொந்த - பந்தங்கள் வியக்குமளவு உங்கள் முன்னேற்றம் உயரும். பிள்ளைகள் பெருமைக்குரிய தகவல் களைக் கொண்டு வந்து சேர்ப்பர். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். கடித அனுகூலம் உண்டு.

இம்மாதம் இனிய மாதமாக அமைய நந்தீஸ்வரர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். சிவனைச் சுமக்கும் நந்தியிடம் உங்கள் குறைகளைச் சொல்லுங்கள். நந்தியின் அருளால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஜென்ம இராகுவால் அடிக்கடி ஆரோக்கிய பாதிப்புகள் உருவாகலாம். வருமுன்காப்போம் என்பதற்கிணங்க மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. கணவன் -மனைவிக்குள் பாசம் கூடும். நேசம் அதிகரிக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேர்வர். செவ்வாயின் பார்வை சனி மீது பதிவதால் உடன்பிறப்புகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். மாதக்கடைசியில் தாய் வழி உறவினர்களால் மனக்கசப்புகள் உருவாகலாம். எதற்கும் பிடி கொடுக்காமல் நடந்து கொள்வது நல்லது. வடக்கு நோக்கிய அம்பிகை வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.




(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்)

**ஆரோக்கியத்தில் அக்கறை தேவை!**

***நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை வரவழைத்துக் கொள்ளும் மகர இராசி நேயர்களே!***

நீங்கள் சதாசர்வகாலமும் சிந்தித்துக் கொண்டே இருப்பவர்கள். பழைய கலாசா ரம் பண்பாட்டை கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்வீர்கள். அமைதியான வாழ்க்கையை வாழ வேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனதின் அடித்தளத்தில் இருக்கும். ஆனால், உணர்ச்சி வசப்படுவதை உங்கள் உடன் பிறப்பாக கொண்டிருப்பீர்கள். உல்லாசத்தை விரும்பும் நீங்கள் உங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட கொள்கைகளை வகுத்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்கு இம்மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசியில் சுக்ரன் சஞ்சரிப்பதால் வருவாய் திருப்தி தரும் என்றாலும் இராசிநாதன் சனி வக்ரம் பெற்று, குடும்ப ஸ்தானத்திலுள்ள செவ்வாயால் பார்க்கப்படுகிறார். எனவே, குடும்ப உறுப்பினர்களில் யாரேனும் ஒருவருக்கோ அல்லது கூடப்பிறந்தவர்களுக்கோ உடல் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

செவ்வாய் பெயர்ச்சியான பின்னாலும், சனியை நேரடிப் பார்வையாக பார்க்கிறார். இதில் மாதத்தொடக்கத்தில் முதல் ஒன்பது நாட்கள் முறையான வழிபாடுகளை மேற் கொள்வதன் மூலமும் முக்கிய பெரியவர்க ளின் ஆலோசனையை கேட்டு நடப்பதன் மூலமே நிம்மதியை நிலைநாட்டிக் கொள்ள இயலும்

மாத,தொடக்கத்தில் சந்திரபலன் கூடுவதால் சுப செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகம், தொழிலில் வந்த பணம் மறுநிமிடமே செலவாகலாம். எனவே தேவையான அளவு மட்டுமே கையில் பணம் வைத்துக் கொண்டால் அளவான செலவு ஏற்படும். செவ்வாய் பெயர்ச்சியாகும் வரை கடன்சுமையை கூட்டிக் கொள்ளாமல் இருப்பது நல்லது சனி வழிபாடு சங்கடங்களைத்தீர்க்கும்.

நாளை மறுதினம் கும்பராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 5, 10 க்கு அதிபதியான சுக்ரன் ஸ்தனஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழிலில் வருமானம் கூடுதல், தொல் லைகள் தந்த எதிரிகள் விலகுவர். பிள்ளை கள்வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும். பெண்வழிப்பிரச்சினைகள் அகலும். வரண்கள் வாயில்தேடிவந்து கொண்டே இருக்கும்.

மீனஇராசியில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். சகாயஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரித்தாலும் சனி அல்லவா பார்க்கிறார். அதுவும் வக்ரச் சனியாக இருந்து பார்ப்பதால் வரும் வாய்ப்புக்களை தாமதப்படுத்தி வைக்கலாம். இருப்பினும் 6, 9 க்கு அதிபதியான புதனுடன் செவ்வாய் இணைவதால் தந்தை வழி தொழிலில் தகுந்த மாற்றங்கள் உருவாகலாம்.


இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டையும் செவ்வாய்கிழமை தோறும்


**சிவல்புரி சிங்காரம்**


முருகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொண்டால் சந்தோசங்களை நாளும் சந்திக்கலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்:**

இம்மாதம் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதோடு செவ்வாயின் பார்வை பதியும் இடத்திலும் தொடர்ந்து உலா வருகிறார். எனவே எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உடன் பிறப்புக்கள் வழியில் ஒரு தொகை செலவாகலாம். கடன் சுமை கூடும் விதத்தில் இருப்பதால் சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை ஏற்பட அனுசரிப்புத்தான் முக்கியம். சனி மற்றும் செவ்வாய் புத்தி நடப்பவர்கள் சங்கடங்களை சந்திக்காமல் இருக்க தெய்வ தரிசனங்களை மேற்கொள்வது நல்லது. கோபத்தை குறைத்துக் கொள்வதன் மூலமும் கூட இருப்பவர்களை நேசிப்பதன் மூலமும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.











அல்வாய் கலையகத்தில் அவை (Forum) அமைப்பின் 33 ஆவது இலக்கிய கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை தாங்கிய மூத்த எழுத்தாளர் தெணியான் உரையாற்றுவதையும் விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் வரவேற்புரையை நிகழ்த்துவதையும் "இசையும் சமூக மாற்றமும் ஓர் ஆக்க இசை அனுபவ தரிசனம்" என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், கலாநிதி த.கலாமணி ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி இறுதிப் போரில் பொதுமக்கள் நிறைந்த பகுதிகளில் அதிகமான விமானத் தாக்குதல்கள்

## தலைமை தாங்கிய தளபதி உண்மையை வெளியிடுகிறார்

நான்காவது கட்ட ஈழப்போரில் ஜெட் போர் விமானங்களின் அணியும், எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் அணியும் ஆயிரத்து 900 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தின. இத் தாக்குதல் களுக்காக மூவாயிரத்துக்கும் அதிகமான தாக்குதல் பறப்புகளை அவை மேற்கொண் டிருந்தன. இவற்றில் பெரும்பாலானவை வன்னியில் பொதுமக்கள் நிறைந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகும் என முன்னாள் விமானப் படையின் தளபதியும் படைத்துறை அதிகாரிகளின் பிரதானியுமான ரொஹான் குணதிலக தெரிவித்துள்ளார்.

நான்காவது கட்ட ஈழப்போரின் போது இலங்கையின் விமானப்படை ஒரு இலட்சம் பேரை இடம் நகர்த்தியுள்ளதுடன், 10 மில்லியன் கிலோ எடையுள்ள வெடி பொருட்களையும் சுமந்து சென்றுள்ளது. காயமுற்ற 21ஆயிரம் படையினரை மீட்டுள்ளது.

அரசாங்கம் பொதுமக்களைப் புறக் கணித்திருந்தால் விடுதலைப் புலிகளை எப்போதோ தோற்கடித்திருக்க முடியும். ஆனால் விடுதலைப் புலிகளும், ஒரு பகுதி ஊடகங்களும் எப்போதும் விமாணப்படையை இலக்கு வைத்து செய்திகளைப் பரப்பினர்.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியின் போது விமானப்படையின் முன்னாள் தளபதியும், படைத்துறை அதிகாரிகளின் பிரதானியுமான எயர் சீவ் மார்சல் றொஷான் குணதிலக்க தெரிவித்துள்ளார். இச் செவ்வியின் முக்கிய பகுதிகள் இங்கே தொகுத்து தரப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல்களை முறியடிக்க நாம் தயாராக இருந்தமைக்கு, விடுதலைப்புலிகளின் இரண்டு விமானங்கள் தரையில் நிறுத்தப்பட்டிருப்பதை கண்டுபிடித்த ஆளில்லா வேவு விமானங்களுக்கே நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஆனால் இவ் விமாணங்களை அழிப்பதற்கு அப்போது இருதரப்பினருக்கும் இடையில் நடைமுறையில் இருந்த போர் நிறுத்தம் தடையாக இருந்தது. 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் மாவிலாறில் போர் ஆரம்பமாவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே இவ் விமானங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவ் விமானங்களை அழிப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் எதிர்பார்த்திருந்தோம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான எமது மூலோபாயத்தின் ஒரு கட்டமாக விமானத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலைப் பெற்றோம். இந்தியாவின் உதவியுடன் விமானப்படை ஒரு வான்பாதுகாப்பு வலையமைப்பை உரு வாக்கியதுடன், சில ஆயுதங்களையும், கருவிகளையும் வேறு சில நாடுகளில் இருந்தும் பெற்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2008ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சீனத் தயாரிப்பு ஜெட் போர் விமானங்களைக் கொள்வனவு செய்தோம். இவ் விமானங்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளிடம் இருந்த மூன்று வேகம் குறைந்த விமானங்களையும் நாம் அழித்தோம்.

ஒரு கட்டத்தில் ஆறு கிபிர் விமானங்களையும், ஐந்து மிக் 27 ரக போர் விமானங்களையும், ஐந்து எவ் 7 ரக போர் விமானங்களையும் செலுத் துவதற்கு 16 விமானப் படையினரே எம்மிடம் இருந்தனர். எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளை செலுத்துவதற்கு 20 விமானப் படையினர் மட்டுமே இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அதிக தூரவீச்சுக் கொண்ட விமான எதிர்ப்பு பீரங்கிகளையும், ஏவுகணைகளையும் கொண்டிருந்தனர். இவற்றில் சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட இடம் நகர்த்தக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் உள்ளடங்கியிருந்தன.

இப் பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகளின் உதவியுடன் விடுதலைப் புலிகள் சில எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளை படை நடவடிக்கைகளின் போது தாக்கியிருந்த போதிலும், அவற்றில் ஒன்றைக் கூட அவர்களால் வீழ்த்த முடியவில்லை.

ஆயினும், விமானப்படை போர் முடிந்த சில மாதங்களில் தென்பகுதியில் பறந்து கொண்டிருந்த போது எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்தி ஒன்றை இழக்க நேரிட்டது.

போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்த போது விடுதலைப் புலிகள் எந்தவொரு வடிவிலான எமது வான் கண் காணிப்பையும், ஆளில்லா வேவு விமா னங்களின் மூலமான கண்காணிப்பையும் கடுமையாக எதிர்த்தனர். விமானப் படை மூன்று ஆண்டுகளுக்குள் விமான எதிர்ப்பு வலையமைப்பு ஒன்றை உருவாக்கியது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது விமானப்படை மொத்தம் 38 விமாணிகளை இழந்தது. அவர்களில் பலர் விமானப்படையின் கட்டளை அதிகாரிகளாக இருந்தவர்கள்.

விடுதலைப்புலிகளின் முதலாவது விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதலில் 2ஆவது ஸ்குவாட்ரனின் கட்டளை அதிகாரி விங் கொமாண்டர் சிராந்த குணதிலக முதலாவதாக கொல்லப்பட்டவர்களில் ஒருவர். விமானப் படை போர் நடந்த காலங்களில் 25 சதவீதமான விமானிகளை தாக்குதல்களின் போதும், விபத்துகளின் போதும் இழந்து



விட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான முழுப்போரிலும் விமானப்படை 62 விமானங்களைப் பறிகொடுத்தது.

ஆனால் நான்காவது கட்ட ஈழப் போரில் விமானிகளுக்கும், விமானங்களுக்கும் ஏற்பட்ட இழப்பு குறைவானது. 1995 - 1996 காலப்பகுதியில் விமானப்படை ஏ.என் 32 ரக விமானம் உட்பட பல விமானங்களை இழந்தது. நான்காவது கட்ட ஈழப் போரில் விமானப் படை மிகமுக்கிய பங்கு வகித்தது. கடற்படையினர் கூட விமானப்படையினரின் உதவிகளைக் கோரினர். விமானப் படையின் நடவடிக்கைகளால் கடற்புலிகள் அதிக அழிவுகளை சந்தித்தனர்.

ஜெட் போர் விமானங்களின் அணிகளும், எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தி அணியும் கடற்புலிகளின் 52 படகுகளை தாக்கியழித்ததுடன், அவர்களின் பயிற்சி முகாம்கள் மீது 425 இடங்களில் தாக்குதல்களை நடத்தின. 32 ஆட்லறி நிலைகள் தாக்கப்பட்டன.

ஈழப்போரின் நான்காவது கட்டத்தில் மிக் 27 ரக விமானங்களின் அணி விடுதலைப் புலிகளின் 700 இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தியது. விடுதலைப் புலிகளுடனான போரின் முழுக் காலத்திலும் விமானப்படை 38 விமானிகளையும், 430 அதிகாரிகள் மற்றும் படையினரையும் இழந்துள்ளதுடன், 350 பேர் வரை காயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நீண்டதூரம் சென்று தாக்குதல்களில் ஈடுபட்ட ஆழ ஊடுருவித் தாக்கும் இராணுவ அணிகளை விமானப் படையின் உலங்கு வானூர்திகளே பலமுறை மீட்டு வந்தன.

கட்டுநாயக்கவை தளமாக கொண்டு இயங்கும் 12ஆவது ஸ்குவாட்ரனில் மிக் 27 ரகத்தைச் சேர்ந்த ஏழு போர் விமானங்களும், மிக் 23 ரகத்தைச் சேர்ந்த பயிற்சி விமானம் ஒன்றும் உள்ளன. இந்த விமானங்களின் அணி 854 தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்காவது கட்ட ஈழப்போரில் மிக் 27 ரக விமானங்கள் மட்டும் ஆயிரத்து 701 தொன் எடையுள்ள குண்டுகளை வீசியுள்ளது. புலிகளின் விமான ஓடுபாதைகள் மற்றும் பதுங்கு குழிகள் மீது ஆழ ஊடுருவும் குண்டுகள் வீசப்பட்டன.

ஓடு பாதைகளை இலக்கு வைப்பதற்கு ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் மிக் 27 ரக விமானங் கள் தரையில் இருந்து 100 மீற்றர் வரை தாழப் பறந்தே குண்டுகளை வீசின. தாழப் பறக்கும் விமானங்களின் மீது குண்டுச் சிதறல்கள் தாக்கி விடாமல் இருப்பதற்காக ஒவ்வொரு குண்டுடனும் பரசூட் இணைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது பாகிஸ்தான், இந்தியா, சீனா, ரஷ்யா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவிகளை இலங்கை விமானப்படை பெற்றது.

1985ஆம் ஆண்டு இலங்கை விமானப்படை முதல் முறையாக இத்தாலியில் இருந்து குண்டுவீச்சு விமானங்களைக் கொள்வனவு செய்ததுடன், 1993 இல் ஆர்ஜென்டீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புக்காரா விமானங்கள் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டன.

ஆனால் விடுதலைப் புலிகள் வெப்பத்தை நாடிச் சென்று தாக்கும் ஏவுகணை களைப் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர், 1995இல் இவ் விமானங்களை நாம் கை விட நேர்ந்தது. இதன்பின்னர் 1996 இல் இஸ்ரேலிடம் இருந்து கிபிர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் ஆட்சியை பாதுகாக்க இந்திய அரசாங்கம் முயற்சித்தது

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை பாதுகாப்பதற்கு இந்திய அரசாங்கம் முயற்சி செய்ததாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த இந்தியா முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கு வழங்கப்படவேண்டுமென இந் தியா சந்திரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு பல்வேறு வழிகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடாவிற்கும் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லயன்ஸ்டான்டுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆதாரம் காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# க.பொ.த (சா/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

*யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி*

யு.சங்கீதா (9ஏ), கே.செந்துயா (7ஏ,2பி), கே.கீர்த்தனா(7ஏ,2சி), கே.சுதர்சனா (6ஏ, 2பி,சி), எஸ்.தர்மிகா(6ஏ,2பி,சி), ஏ.சுதர்சினி (6ஏ,2சி,எஸ்), ஏ.தர்சினி(6ஏ, 2சி,எஸ்), ஏ.அபிஸா (5ஏ,பி,2சி,எஸ்), பி.பானுப்பிரியா (5ஏ,3பி,சி), ஜே.ஜெயப்பிரியா (5ஏ,2பி,சி, எஸ்), ஜே.நிரோஜனா (5ஏ,பி,3சி), பி.துஸிதா (4ஏ,4பி,சி), ரி.அஜந்தன் (4ஏ,5பி),பி.ஜெய மீரா (4ஏ,2பி,2சி,எஸ்), கே.பிரசாந்தினி (3ஏ,2பி,3சி), ஆர்.லுக்சிகா (3ஏ,3பி,2சி,எஸ்), பி.ஜெனனி (3ஏ, 4சி,எஸ்), ரி.கைஸ் ணமீரா (3ஏ,4பி,சி, எஸ்),ஜே.யெனிசா (3ஏ,பி, 3சி,எஸ்),எஸ். பவானி (3ஏ,3பி, 2சி), பி.இளவரசி (3ஏ, 2பி,3சி,எஸ்), எஸ்.கௌ சிகா (3ஏ,2பி,4சி), எஸ்.சுயீபா(3ஏ,பி,4சி)

*ஆங்கில மொழி மூலம்*

ஏ.பிரியங்கா(9ஏ),வி.மிதுளாயினி (9ஏ), ரி.அபிரா (8ஏ,பி), கே.கிருசாயினி (7ஏ,2பி), ஜி.தர்சிகா (7ஏ,பி,சி), எம்.ரம்மியா (7ஏ,பி,சி), எஸ். ஜெயதக்சா (7ஏ,பி,சி), பி.ரூபிகனிஸ்ரா (7ஏ,2சி), எஸ்.கோபிகா(4ஏ,3பி,2சி), ஆர். மாதுனி (4ஏ,2பி,3சி), எம்.கீர்த்தனா (4ஏ, 3சி,2எஸ்), தி.பிரவீனா (2ஏ,பி, 4சி,2எஸ்).(ஸ்ரீ)

# உள்ளூராட்சி சபைகளின் முதலாவது சபை அமர்வு

(கொழும்பு)

வாக்குப்பதிவுகள் இடம் பெற்ற உள்ளூராட்சி சபைகள் அனைத்திலும் முதலாவது சபை அமர்வுகள் எதிர்வரும் முதலாம் திகதிக்குமுன்னர் இடம்பெறும் என மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் தெரிவித்துள்ளது.

இதன் படி தேர்தல்கள் இடம் பெற்ற 234 உள்ளூராட்சி சபைகளிலும் முதலாவது சபை அமர்வுகள் விரைவில் நடாத்தப்பட வேண்டும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், கடந்த வருடம் அனைத்து உள்ளூராட்சி சபைகளினதும் நிர்வாக காலத்தை அரசாங்கம் ஒரு வருடத்ததினால் நீடித்தது.

இதன் படி எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் குறித்த கால அவகாசம் நிறைவடைகின்றது.

எனவே சபை அமர்வுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது (ஸ்ரீ-2)

# ஐ.நா.அறிக்கை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஐ.நாவின் போர்க்குற்ற ஆலோசனைக்குழு தனது அறிக்கையை பூர்த்தி செய்துள்ளது. அதில் இலங்கை தொடர்பில் மிகவும் அழுத்தமான தகவல்கள் உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதாவது ஐ.நாவின் அறிக்கை இலங் கை அரசுக்கு சாதகமானது அல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐ.நாவின் அறிக்கை பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் பான் கீ மூனுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

எனினும் இந்த மாதம் சமர்ப்பிக்கப்படும் இந்த அறிக்கை பொதுமக்களின் பார்வைக்கு அளிக்கப்படுமா என்பது தொடர்பில் இதுவரை முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. (ஸ்ரீ)

# பஹ்ரைனில் தொழில் வாய்ப்பு பெற்று செல்வதற்கு தடை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பஹ்ரைனில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பஹ்ரைனில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை தொடர்ந்தே அந்நாட்டுக்குத் தொழில்வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்களை தற்காலிகமாகத் தடைசெய்யுமாறு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நாட்டு அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுவடைந்துள்ளதைத் தொடர்ந்து அங்குள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு இலங்கையைச்சேர்ந்த சுமார் 20 ஆயிரம் மக்கள் தொழில் புரிந்து வருவதாகவும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது (ஸ்ரீ-2)

# இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

காலி அஹமாவில் இரு இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்தமை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வரும் இராணுவ சிப்பாய் ஒருவரையும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் மார்ச் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி இளைஞர்களில் ஒருவர் கடந்த வியாழனன்று உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்த நிலையில் வார இறுதியில் உயிரிழந்தார்.


இச்சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேவேளை இராணுவச் சிப்பாய் சம்பந்தப்பட்டமை தொடர்பாக இராணுவம் தனியான விசாரணை நடத்தி வருகிறது.

இந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதன் பின்னர் கிராமவாசிகள் பொலிஸ் ஜீப் ஒன்றை தீக்கிரையாக்கியமை குறிப்பிடத்தக்கது (ஸ்ரீ)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் கால எல்லை ஒருவருடத்தால் நீடிப்பு

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்த நிலையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உத்தியோக பூர்வ காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள சம்பவங்களுக்கு எவ்வாறான துறைமையின் கீழ் தீர்வு வழங்குவது மற்றும் தீர்வுத்திட்டங்கள் அரசாங்கத்திற்கு முன்வைப்பதற்கு வேண்டிய காலத்தை பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)




*யா/ மகாஜனாக் கல்லூரியில் உலக நாணயத் தாள் கண்காட்சி நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வை ஒழுங்கமைத்த பேராசிரியர் ச.அந்தோனிசாமி நிற்பதையும் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் மற்றும் மாணவர்கள் நாணயங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்: பாலமுரளி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

**69**





கவிப்பேரரசு வைரமுத்து

"மொட்டையன் பாறை முக்கலே அரைக்கா முங்கிப்போச்சாம். கொண்டம்மா கரட்ல இச்சி மரந்தான் மிச்சமாம். நாப்பது நாப் பத்தஞ்சடி தண்ணி ஏறுதுன்னு வச்சுக் குங்க. அணைத் தண்ணியில அச்சுவெல்லம் மாதிரி கரைஞ்சிருமா இல்லையா கள்ளிப் பட்டி? போறமப்பா! பொழப்பப் பாக் கணுமப்பா. பெரியகுளமோ தாமரைக் குளமோ- வடுகபட்டியோ மே(ல்)மங்க லமோ - செயமங்கலமோ கெங்குவார் பட்டியோ- உள்ளநாள் இருந்திட்டு -உசுர எங்க விடப்போறோமோ அங்க போறோம். பெரியவரே! பேயத்தேவரே! அணக்கட்டுத் தண்ணிய மெதமா நெனைக்காதப்பா. கழுதப்புலி மாதிரி பம்மிக்கிட்டேயிருந்து பாஞ்சிரும். நீயும் காலாகாலத்துல காலி பண்ணிரப்பா! ஒரு மண்ல பொறந்தோம்; ஒண்ணா வளந்தோம்; ஒரே தண்ணி குடிச்சோம். ஒண்ணு எங்களோட நீ வந்திரு! இல்ல ஒன்னோட நாங்க வாரோம்."

தோள்ல ஆட்டுக்குட்டியப் போட்டுக் கிட்டே பேயத்தேவர் கையப்புடிச்சுக்கிட்டு செவத்தவீரன் பேசுன பேச்சில ரெண்டு பேருக்குமே கண்ணீர் வந்திருச்சு.

காலம் போன கடைசியில- கண்ணீர் வத்திப் போன வயசுல- ஊர்ப்பெருசுக ரெண்டும் ஒண்ண ஒண்ணு கட்டிப்புடிச்சு அழுகுறதப்பாத்து மனசு கனத்துப்போயி மருகி நிக்குது ஊரு.

"செவத்த வீரா என் நல்லது கெட்டதுக் கெல்லாம் கூட இருந்த ஆளப்பா நீயி. அய்யா ஆசாரி! பெத்த தாயி வேறன் னாலும் ஒத்ததாயி பெத்த மக்களா வாழ்ந்துட்டமப்பா இந்த மண்ணுல. என்னமோ 'இந்த மண்ண விட்டுட்டுப் போகாதேடா மகனே'ன்னு உள்மனசுக் குள்ள ஒரு கவுளி கெடந்து கத்திக் கிட்டேயிருக்கு. பாப்பம்... எந்தலையில என்ன எழுதியிருக்குன்னு பாப்பம்."

"அப்ப... நாங்க முன்னால போறோம். நீங்க பின்னாலயே வாங்க. எந்த அடுப்புல எந்த வெறகுல எங்க கஞ்சி கொதிக் கப்போகுதுன்னு தெரியல. போறோம்; முன்னாலே போறோம். பொழச்சுக் கெடந்தாப் பாப்போம்.

-ஒரு கையில சொமையைப் புடிச்சுக்கிட்டு ஒரு. கையில கண்ணைத் தொடைச்சுக்கிட்டே போறவுகளப் பாத்துப் பேச்சு மூச்சில்லாம பேயத் தேவர் நிக்க ஒரு முந்நூறு அடி முன்னுக்குப் போன ஆளுக பொசுக்குன்னு நின்னாக. பேயத்தேவரைத் தேடிச் செவத்தவீரன் பின்னுக்குவரவும் எல்லாரும் அவரு பின்னாலயே வந்தாக.

"சீமவிட்டுச் சீமபோயிப் பொழைச்சாலும், கண்டம் விட்டுக் கண்டம் போயிப் பொழச்சாலும் பொறந்த மண்ணோட புடிமண்ணு வேணுமா இல்லையா! இந்த ஊர்லயே பெரிய மனுசன் யாரு? இந்த மண்ணுல எங்களுக்கு முன்னுக்கப் பெறந்த மூத்த ஆளு யாரு? நீதானப்பா! ஒங்கையி வாழ்ந்த கையப்பா! வளமான கையப்பா! ஒங்கையால புடிமண்ணெடுத்துப்போடு. மடியில வாங்கிக் கிர்றோம். பொழைக்கப் போற எடத்துல புடி மண்ணப் போட்டு வீடோ கோயிலோ கட்டிக்கிர் றோம். நாளைப்பின்ன வந்து புடிமண்ணு எடுக்கவும் இந்தப்பூமி இருக்குமோ இருக்காதோ? போடப்பா! புடிமண்ணு எடுத்துப்போடப்பா!"

செவத்த வீரன் தோள்லகிடந்த துண்டேந்தி நிக்க, கூடவந்த கூட்டமும் மடியேந்தி நிக்குது.

பித்துப்புடிச்ச ஆளு மாதிரி நிக்குறாரு பேயத்தேவர். அடைக்குது தொண்டை ; வலிக்குது நெஞ்சு. ஒடம்புல இருக்கிற கண்ணீரெல்லாம் ஒரு சொட்டு மிச்சமில்லாம ஒழுகுது தாரைதாரையா.

அகாயத்தையும் பூமியையும் அவரு கையெடுத் துக் கும்பிட்டு ஒரு பெருமூச்சு விட்டுக் கண்ண மூட, கவிந்த இமை போயிக் கண்ணீரைக் கத்தரிக்க, கடைசிக் கண்ணீர்ச் சொட்டும் துண்டா ஓடிப் போயித் தூர விழுகுது.

ஆடாம அசையாம அப்படியே மண்ணுல ஒக்காந்தாரு; மண்டிபோட்டாரு;மண்ணத்தொட்டுக் கும்பிட்டாரு; ரெண்டு கையையும் அகலமா விரிச்சு மண்ண அள்ளுனாரு; கைநடுங்க ஒதடு துடிக்க எந்திரிச்சாரு; செவத்தவீரன் துண்டுல கொட் டினாரு; மடியேந்தி நின்னவுகளுக்கெல்லாம் மண்ணள்ளிப்போட்டாரு.

தங்கத்தூளா நெனைச்சு அந்த மண்ணை முந்தானையில முடிஞ்சுக்கிட்டு, கள்ளிப்பட்டி ஆளுக கத்தாழங்காட்டு வழியே வடக்கமுன்ன பொணமா நடந்து போறாக.

மீசையும் வாலும் மட்டும் எளைக்காம, வயிறும் தோலும் வத்திப்போன ஒரு பூனை எந்த வண்டியிலயாவது தன்னை ஏத்திக்கிருவாகளான்னு அங்கிட்டும் இங்கிட்டும் அலைஞ்சு, எந்த வண்டியலயும் எடமில்லாம வான்னு கேக்கவும் ஆளில்லாம எல்லாக்காலுக்குக் கீழயும் பந்து மாதிரி மிதிபட்டு வலி பொறுத்துக் கத்திக்கிட்டே வழிகூடிப்போகுது.

செவத்தவீரன் வீட்டு வெள்ளநாய் மட்டும் அம்பலக் கல்லுக்குக் கீழ "என் கனா முடியிற மட்டும் காலிபண்ணச் சொல்லாதீகப்பா" ங்கிற மாதிரி ஒரு காலத்தூக்கி வயித்துப்பக்கம் ஈயடிச் சுக்கிட்டே தூங்கிக்கிட்டிருக்கு.

அரசங்குட்டிக்குக் கீழ அம்பல்க்கல்லு மேல துண்ட ஒதறி விரிச்சு, ரெண்டு கையும் கூட்டித் தலைக்கு வைச்சு, கண்ணுல ஒரு பொட்டு உறக்கமில்லாமப் பொரண்டு பொரண்டு படுத்து விடிய விடிய யோசிச்சாரு பேயத்தேவர்.

அவரு ஒறக்கம் வராம நட்சத்திரங்கள வேடிக்கை பாத்துக்கிட்டிருந்த அதே நடுச் சாமத்துல கம்பங்காட்ட முங்கி, அவரு உசிரக் குடுத்து வெட்டின கிணத்த ஒரே மடக்குல குடிச்சுட்டு வேட்டநாயி மாதிரி காலைத்தூக்கி விறுவிறுன்னு ஏறி வருது தண்ணி.

புத்தியில திடீர்ன்னு தீப்புடிக்குது பேயத் தேவருக்கு. ஊரே காலிபண்ணிப் போயிருச்சே... நல்ல பாம்பு கடிச்ச விஷம் மாதிரி தண்ணிவேற விறுவிறுன்னு ஏறுதுங்கிறாகளே! கள்ளிப்பட்டி முங்குமா முங்காதா? ஒரு வேளை... முங்கிருச்சுன்னா?

விடிஞ்சும் விடியாம எந்திரிச்சு, உள்ளங்கை ரெண்டையும் கரகரன்னு தேச்சு கைச்சூட்டக் கொண்டு போயிக் கண்ணுக்குள்ள வைக்கிறப்ப உசிரக் கையில புடிச்சு ஓடிவந்தான் செம்பட்டை.

"அய்யா! ஆள முங்க வருதய்யா அணைத்தண்ணி! ஒங்க கம்பங்காடு முங்கி இண்டங்காடு ஏறுதய்யா! சோளக்காட்டுக்குக் காவலுக்குப் படுத்திருந்தேன். கொல்லாம விடமாட்டேன்னு கூடவே வருதய்யா! நின்டா முங்குது; நடந்தா மெரட்டுது; ஓடினா வெரட் டுது; இன்ன நேரமின்டு இல்ல கள்ளிப்பட்டிய முங்குறது. சட்டுப்புட்டுன்னு வண்டியைப் பூட்டிச் சட்டிபொட்டிய ஏத்தய்யா!"

செம்பட்டை அபாயச்சங்கை ஓங்கி ஊதிட்டு ஒரே ஓட்டமா ஓடிப்போயி சாகக்கெடக்கிற அவன் ஆத்தாளத் தோள்லத் தூக்கிப் போட் டுக்கிட்டு ஒரு எடத்திலயும் நிக்காம ஓடியே போனான்.

வருச நாட்டு ஆடிக்காத்து 'உய்'ன்னு அடிச்சு நாதியில்லாத ஊர்ல நாட்டாமை பண்ணிட் டுப்போகுது. நஷ்ட ஈடு கொடுத்த சர்க்காரு பல வீடுகள்ல எடுக்கவும் விடல; ஏலமும் விடல; காத்துல பறந்து வந்த தகரம் ஒண்ணு அவர் கழுத்து வரைக்கும் விருட்ன்னு வந்திட்டுத் தெசைமாறி வேறெங்கயோ போய் விழுகுது. ஒத்தாசைக்கு அளில்லாம ஒத்த ஆளா நிக்கிறாரு பேயத்தேவரு.

"சீ! போட்ட கணக்குத் தப்புக்கணக்காப் போச்சே. இந்த மண்ணுலதான் இருந்தாகணுங் கிறது எனக்கு நியாயமா இருக்கலாம். என்ன நம்பி இருக்கிற சீவன்களுக்கு நியாயமா இருக்குமா? சரி! ஊரவிட்டுப்போயிருவோம். தண்ணி புடிக்காம இருந்தா வந்து பொழைச் சுக்கிருவோம். ஏலே மொக்க! பூட்றா வண்டியை! ஏத்துறா சாமான! "

*(வளரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

12

## ஆய்வுகூடங்களில் தரம் பேணலும் கட்டுப்பாடும்



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

**ஆய்வுகூடத்தில் வைத்திருக்க வேண்டியவை**

01. காசநோயினைக் கண்டறியும்
    - புத்தகம்
    - படிவம்
    - ஆய்வு
02. உள்ளக தரக்கட்டுப்பாடு
    - 2.1 நியம முறையில்
        - நுணுக்குக்காட்டி
        - கழிவுகள் அகற்றல்
        - வெளி தரநிர்ணயம்
        - சாயம் தயாரித்தல்
        - நுணுக்குக்காட்டிப் பராமரிப்பு
        - சுத்தம் செய்தல்
        - தரவுபடுத்தல்
    - 2.2 உள்ளகத் தரக்கட்டுப்பாட்டுப் பதிவுகள்
        - சாயமிடல்
        - சாயம்
03. வெளி தரநிர்ணயம்
    - மாதாந்த பின்னூட்டல்
    - காலாண்டு பின்னூட்டல்
    - மேற்பார்வையிடல்
04. உபகரணங்கள்
    - உபகரணங்களின் பட்டியல்
    - அளவை செப்பனிட்ட பதிவுகள்
    - உபகரண தரம் பரிசோதித்தல்
    - தரக்கட்டுப்பாடு
05. விநியோகித்தற் கட்டுப்பாடு
    - எதிர் அளவுக் கணக்கெடுத்தல்
    - களஞ்சியப் புத்தகம்
    - விநியோகிக்கும் புத்தகங்களின் பதிவுகள்
    - உள்ளவை பரிசீலிக்கப்படும்.
06. புள்ளி விபரங்கள்
    - நுணுக்குக்காட்டி சேவையின்
    - வேலையின் அளவு/மொத்த/மாதாந்த
    - பரிசீலிக்கப்படும் சிலைட்டுகளில் காசநோய்க் கிருமி உள்ள விபரம்
    - நுணுக்குக்காட்டியின் புள்ளி விபரங்கள்
07. நிர்வாகத் தரவு
    - நுணுக்குக்காட்டி இடங்களின் பட்டியல்
    - கட்டமைப்பு
    - கடமைகளும் பொறுப்புகளும்
    - உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள்

நுணுக்குக்காட்டி நிலையங்களை மேற்பார்வைத் தரிசிப்புச் செய்யும்போது மாவட்ட காசநோய் சிகிச்சை நிலையத்தில் இருந்து கவனிக்க வேண்டிய தரவுகள்

1) பொறுப்புத் தரவுகள்
- நுணுக்குக்காட்டி நிலையத்தின் பெயர்
- மாவட்டம்
- பணிபுரியும் ஆய்வுகூட தொழில் நுட்ப உத்தியோகத்தர்
- தற்போது பணிபுரிபவரின் பெயர்/பதவி
- மேற்பார்வையிட்ட திகதி
- மேற்பார்வையிட்ட அணியிலுள்ளவர்களின் பெயரும் பதவியும்

2) முன்னைய மேற்பார்வையில் மேற்கொள்ளுமாறு கூறப்பட்டவற்றில் செய்யப்பட்டவை

3) தற்போதைய மேற்பார்வையில் கவனிக்க வேண்டியவை,

பாவித்து முடிபவை:
- கண்ணாடித் தகட்டினை மீள் உபயோகம் செய்தல் கூடாது.
- சளிப்பரிசோதனைக்கான கொள்ளளவி
- கண்ணாடியைத் துடைக்கும் கடதாசி
- அமிழ்த்தும் எண்ணெய்
- கிருமிகளைக் கொல்பவை உள்ளனவா? என அவதானித்தல் (பீனோல், 3% குளோரின்)
- சளிப்படலம் தயாரிப்பு/சாயமிடல் உபகரணங்கள் சாயமிடும் இடம், ஈர்க்கு
- டயமன் பென்சில்
- ஸ்பிரிட் விளக்கு/ பன்சன் விளக்கு

நுணுக்குக்காட்டி நிலையங்களை மேற்பார்வைத் தரிசிப்புச் செய்யும்போது மாவட்ட காசநோய் சிகிச்சை நிலையத்திலிருந்து கவனிக்க வேண்டிய தரவுகள்

01) பொறுப்புத் தரவுகள்
1. நுணுக்குக்காட்டி நிலையத்தின் பெயர்
2. மாவட்டம்
3. பணிபுரியும் ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
4. தற்போது பணிபுரிபவரின் பெயர்/ பதவி
5. மேற்பார்வையிட்ட திகதி
6. மேற்பார்வையிட்ட அணியிலுள்ளவர்களின் பெயரும் பதவியும்

02. முன்னைய மேற்பார்வையில் மேற்கொள்ளுமாறு கூறப்பட்டவற்றில் செய்யப்பட்டவை

03. தற்போதைய மேற்பார்வையில் கவனிக்க வேண்டியவை
- 3.1 பாவித்து முடிபவை
- 3.2 மீள உபயோகித்தல் (Slides) தவிர்க்க வேண்டியது
- 3.3 சளிப் பரிசோதனைக்கான கொள்ளளவி
- 3.4 கண்ணாடியைத் துடைக்கும் கடதாசி
- 3.5 அமிழ்த்தும் எண்ணெய்
- 3.6 கிருமிகளைக் கொல்பவை (Phenol Lysol)
- 3.7 சளிப்படலம் தயாரிப்பு/ சாயமிடல் உபகரணங்கள்,சாயமிடும் செயல், வளை, ஈர்க்கு
- 3.8 ஸ்பிரிட் விளக்கு/ பன்சன் விளக்கு

| இல | விபரம் | திருப்தி/ தரமானது | பிரச்சினைகள் அடையாளம் காணப்படல் |
|---|---|---|---|
| 01 | உட்கட்டமைப்பு | ஆம்/ இல்லை | |
| 1.1 | காசநோய் ஆய்வு-பரிசோதனை தனியாக இடம் ஒதுக்கப்படல் | ஆம்/ இல்லை | |
| 1.2 | சளி மாதிரியினைப் பெற்றுக்கொள்ள தனியான இடம், சளிப்படலம் தயாரிக்கத் தனியான இடம், நுணுக்குக்காட்டியில் பார்வையிடத் தனியான இடம் | ஆம்/ இல்லை | |
| 1.3 | ஒழுங்கான மின்சார வசதி (தடைப்படாதது) | ஆம்/ இல்லை | |
| 1.4 | குழாய் மூலமான/ தொடர்ச்சியாக நீர் வழங்கல் | ஆம்/ இல்லை | |
| 02 | தரமான செயற்றிறனுக்கான தேவைகள் | ஆம்/ இல்லை | |
| 2.1 | சாயமிடும் செயல் | ஆம்/ இல்லை | |
| 2.2 | தரமிடும் அட்டவணை | ஆம்/ இல்லை | |
| 2.3 | சாயமிடும் முறைகளுக்கும் இரசாயனப் பதார்த்தங்களுக்கும் தரக்கட்டுப்பாடு | ஆம்/ இல்லை | |
| 2.4 | நுணுக்குக்காட்டியினைச் சரியாகப் பாவித்தலும் சுத்தமிடலும் | ஆம்/ இல்லை | |
| 2.5 | பாவித்த சிலைட்டினை அகற்றலும் கழிவுகளை அகற்றலும் | ஆம்/ இல்லை | |
| 2.6 | வெளித் தரநிர்ணய மாதிரி | ஆம்/ இல்லை | |

(தொடரும்)

# வடபகுதி கடற்றொழிலாளர்கள் இடையூறின்றி தொழில் செய்யும் நிலைமை விரைவில் உருவாகும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறி வந்து கடல்வளங்களை அழித்தல், கடற்றொழிலாளர்களது தொழில் உபகரணங்களை அழித்தல் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துதல் போன்ற காரணங்களால் வடபகுதி கடற்றொழிலாளர்கள் முகம்கொடுத்து வரும் பாரிய பிரச்சனைக்கு விரைவில் தீர்வுகாணும் முயற்சிகள் வெற்றியடைந்து வருவதாகவும் இது குறித்து பேச்சுவார்த்தைகள் சகல தரப்பினருடனும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதி கடற்றொழிலாளர்கள் முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினை என்பது வாழ்வாதாரப் பிரச்சினையாகும். இது குறித்து நான் கடந்த மாதம் வடபகுதியின் கடற்றொழிலாளர் சமாசங்களை அழைத்து கலந்துரையாடியதுடன் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குக் குறைந்தது ஒரு மாத கால அவகாசம் தேவை என்றும் அவர்களிடம் தெரிவித்திருந்தேன்.

இதனடிப்படையில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை மற்றும் நாகை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இந்திய மீனவர் சங்கங்களோடு தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளார்கள் என்பது மேலும் நம்பிக்கை தரும் விடயமாகும்.

இதேவேளை இலங்கை இந்திய அரசு தரப்பு பிரதிநிதிகளுக்கிடையிலான கூட்டுச் செயற்பாட்டுக்குழு அரசமட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 28,29ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இதில் சுமுகமானதும் வடபகுதி கடற்றொழிலாளர்களின் இடையூறுகளற்ற தொழில் செய்யும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்குமான தீர்மானம் எடுக்கப்படும். இதேவேளை எதிர்வரும் காலங்களில் எந்தவிதத் தடைகளுமின்றி எமது கடற்றொழிலாளர்கள் எமது கடல் வளங்களை முழுமையாக அனுபவிக்கும் நிரந்தரமானதொரு சூழல் உருவாகும்.

இதுவரை பொறுமை காத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய வடபகுதி கடற்றொழிலாளர்கள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை-இந்திய அரசு பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் உரிய பலனை அடைய முடியுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி நடைபெறுமென சங்கத் தலைவர் என்.இராஜதேவன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான உபயகதிர்காமம், புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி தேவசேனா நாராயண சர்மா என்பவர் மரணமானதையடுத்து அவரது இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சத்து 98 ஆயிரத்து 312 ரூபாய் பெறுமதியான காசோலையை அவரது கணவர் இ.நாராயண சர்மாவிடம் பிராந்திய அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிறோஜன் கையளிப்பதையும் அருகில் கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன் மற்றும் விற்பனை நிறைவேற்று அதிகாரி ஜே.வெஸ்லி பிரசாந் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: பொலிகண்டி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# நிபுணர்குழுவின் இறுதியறிக்கை இலங்கைக்கு பாதகமாக அமையும்

## இலங்கை இராஜதந்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை இலங்கைக்கு பாதகமானதாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை தளமாக கொண்ட இராஜதந்தரி ஒருவர் இதனை தெரிவித்துள்ளார். ஐ.நா.நிபுணர் குழு தமது அறிக்கையை உறுதிப்படுத்தி விட்டது.

இந்நிலையில் இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்பதை அந்த அறிக்கை வலியுறுத்துவதாக குறித்த இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இந்த அறிக்கை வெளிப்படையாக அமைய வேண்டும். எனவே அதனை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் பான் கீ மூனை வலியுறுத்தி வருவதாகவும் அந்த இராஜதந்திரி தெரிவித்துள்ளார்.

எனவே இந்த மாத இறுதிக்குள் பான் கீ மூனிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிபுணர் குழுவின் அறிக்கையை பான் கீ மூன் ஊடகங்களுக்கு வெளியிடுவார் என்றும் இலங்கையின் இராஜ தந்திரி கூறியுள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் சட்டமா அதிபரின் தலைமையிலான குழு. பான் கீ மூனை சந்தித்து இந்த அறிக்கையை வெளிப்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட போதும் அதனை மீறி அந்த அறிக்கை வெளிப்படுத்தப்படும் என இராஜ தந்திரி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.தே.க.தலைவர் ரணிலா? சஜித்தா?

## இன்று தெரியும்

ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரின் போட்டியாளரான சஜித் பிரேமதாச ஆகியோர் மத்தியில் யார் தலைவர் என்ற விடயம் இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் போது தீர்மானிக்கப்படவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்த வரை தாமே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என தெரிவித்து வருகிறார்.

இந் நிலையில் இதுவரை காலமும் தாமே தலைவராக வேண்டுமெனக் கூறிவந்த சஜித் பிரேமதாச தற்போது இந்த விடயத்தில் இணக்கம் ஏற்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இணக்கம் ஒன்றின் மூலமே கட்சியில் தலைமை பிரச்சினையை தீர்க்க முடியும் என்று சஜித் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சின் செயற்பாட்டுக்குழு க்கூட்டத்தில் இணக்கமான முறையில் தலைவர் ஒருவர் தெரிவு செய்வதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

அதில் இணக்கம் ஏற்படாவிடின் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று கட்சித்தரப்புக்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

# ஐ.தே.க.தோல்வியடைந்தமைக்கான காரணம் பகிரங்கப்படுத்தப்படும்

## சஜித் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதனால் தோல்வியைத் தழுவியது என்பது விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் தாம் ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு தோல்வியடைந்தது என்பது தொடர்பிலும் ஆளும் கட்சி எவ்வாறு வெற்றியீட்டியது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தத் தேர்தலில் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளமையை ஒப்புக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.03 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ 1556 - கண்டர்பரி பேராயர் தோமஸ் கிரான்மர் ஒக்ஸ்போர்ட் நகரில் எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ 1788 - லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரில் நிகழ்ந்த பெரும் தீயினால் 25 சதவீத மக்கள் கொல்லப்பட்டனர்.

★ 1800 - ரோம் நகரில் இடம்பெற்ற கலகங்களை அடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் நகரை விட்டு அகற்றப்பட்டனர். அதன் பின், வெனிஸ் நகரில் ஏழாம் பயஸ் பாப்பரசராகப் பதவியேற்றார்.

★ 1801 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையில் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் போர் இடம்பெற்றது.

★ 1844 - பஹாய் நாள்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி இந்நாள் முதலாம் ஆண்டு முதலாம் நாள் ஆகும்.

★ 1905 - ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது புகழ் பெற்ற சிறப்புச் சார்புக் கோட்பாடு கொள்கையை வெளியிட்டார்.

★ 1913 - ஒகைய்யோவில் டேட்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளம் காரணமாக 360 பேர் கொல்லப்பட்டு 20 ஆயிரம் வீடுகள் அழிந்தன.

★ 1917 - டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1933 - டேச்சு வதை முகாம், நாசிகளின் முதலாவது வதை முகாம், ஜேர்மனியில் அமைக்கப்பட்டது.

★ 1935 - பேர்சியா நாட்டை ஈரான் (ஆரியரின் நாடு) என அழைக்கும்படி ரெசாஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

★ 1945 - இரண்டாம் உலப் போர்: பர்மாவின் மண்டலாய் நகரை பிரித்தானியப் படைகள் விடுவித்தன.

★ 1948 - முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.

★ 1960 - நிறவெறி: தென்னாபிரிக்காவில் ஷார்ப்வில் என்ற இடத்தில் கறுப்பின தென்னாபிரிக்க ஆர்ப்பாட்டக்காரரை நோக்கி பொலிஸார் சுட்டதில் 69 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1970 - முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ மேயர் ஜோசப் அலியோட்டோ விடுத்தார்.

★ 1980 - ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து மொஸ்கோவில் 1980 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிப்பதாக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.

★ 1984 - இலங்கை அரசினால் மணலாறு பிரதேசம் தடை வலயமாக்கப்பட்டு அங்கிருந்த தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்.

★ 1990 - 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.

★ 1994 - ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய Schindler's List ஏழு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

★ 1998 - புனித வெள்ளி உடன்பாடு வடக்கு அயர்லாந்தில் எட்டப்பட்டது.

### பிறப்புகள்

★ 1768 - ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சுக் கணிதவியலாளர் (இ. 1830)

★ 1807 - சைமன் காசிச்செட்டி, 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் தமிழ் புளூட்டாக் நூலை எழுதிய ஈழத்தவர்.

★ 1916 - பிஸ்மில்லா கான், உலகப் புகழ் பெற்ற ஷெனாய் இசை மேதை (இ. 2006)

★ 1922 - முஜிபுர் ரகுமான், வங்காள தேசப் பிரதமர் (இ. 1975)

★ 1923 - என்.மகாலிங்கம், தமிழகத் தொழிலதிபர்

★ 1932 - வால்டர் கில்பேர்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்.


★ 1936 - காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (இ. 2004)

**1857 - ஜப்பானின் தலைநகரமான டோக்கி யோவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?



ஆன்மீகம் 01

### நீங்கள் ஒரு ஆனந்தத் தொழிற்சாலை!

கடந்த இருபத்துநான்கு மணி நேரத்தில் நீங்கள் எவ்வளவு மணி நேரம்; அல்லது எத்தனை நிமிடங்கள் ஆனந்தமாக இருந்தீர்கள்? இதைச் சற்று ஆழமாக யோசித்துப் பாருங்கள் ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குச் செல்லுமுன் ஐந்து நிமிடங்களையாவது இதற்காக ஒதுக்குங்கள் 'இன்று எவ்வளவு நேரம் நான் ஆனந்தமாக உணர்ந்தேன்... நேற்றைவிட



இன்று என் ஆனந்தம் குறைந்து விட்டதா? அல்லது அதிகமாகி இருக்கிறதா?' என்று அசை போட்டுப் பாருங்கள்.

இது அவசியம் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய விடயம்! வாழ்க்கையில் நீங்கள் பல விடயங்களைச் செய்ய நேர்ந்தாலும் அந்தச் செயல்களின் ஒரேநோக்கம்' ஆனந்தமாக இருக்கவேண்டும்' என்பதுதான். இல்லையா? ஆக, நீங்கள் ஒரு ஆனந்தத் தொழிற்சாலை! ஆனந்தம் என்ற அற்புதமான விடயத்தை உருவாக்குவதே உங்கள் வேலையாக எப்போதும் இருக்கிறது.

ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது எவ்வளவு ஆனந்தமாக இருந்தீர்கள்...அன்று நீங்கள் பெரிதாக எதையுமே செய்து விடவில்லை; ஆனாலும் ஆனந்தமாக இருந்தீர்கள். வளர்ந்தபிறகு இன்று எத்தனையோ செயல்களைச் சாதித்தும் உங்களால் ஆனந்தமாக இருக்க முடியவில்லை.

குழந்தைப் பருவத்தில் உங்களால் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. பெரியவர்கள் கைகாட்டும் திசையில் உங்கள் வாழ்க்கை நகர்ந்தது. அப்போதெல்லாம், 'வேகமாக வளர வேண்டும், இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழவேண்டும்' என்று நினைத்தீர்கள். நினைத்தது போலவே இப்போதும் வளர்ந்து விட்டீர்கள். சுதந்திரமான வாழ்க்கைக்கான தேவைகளாக நீங்கள் நினைத்த வேலை அல்லது தொழில், வீடு, வாகனம், வங்கிக் கணக்கு, குடும்பம் என எல்லாவற்றையும் உருவாக்கிவிட்டீர்கள். இவை அனைத்தும் வரவர, உங்கள் ஆனந்தமும் பல்மடங்கு பெருகியிருக்க வேண்டும்தானே! ஆனால் இன்று ஆனந்தத்தைத் தொலைத்து விட்டு, இவற்றில் சிக்கிக்கொண்டு தவிக்கிறீர்கள்.

நாம் ஒரு தொழிற்சாலை நடத்துகின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அதற்குத் தேவையான மூலப் பொருட்களை எல்லாம் வாங்கிச் சேர்த்து, ஆட்களை நியமித்து, நிர்வகித்து, நாள்முழுவதும் நமது கடுமையான உழைப்பை அங்கு கொடுக்கிறோம்.எல்லாம் செய்தும் இறுதியில் நாம் எதிர்பார்த்த பொருள் உற்பத்தியாகவில்லை என்றால், அந்தத் தொழிற்சாலையை என்ன செய்வது? ஒன்று அதை இழுத்து மூடிவிட வேண்டும்; அல்லது அதை சரிபார்த்தே ஆகவேண்டும். அவ்வளவு தான்.. இல்லையா?

### வாழ்க்கையின் ஆதாரம்!

'கடைசியில் எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்' என கதையில் முடிவைச் சொல்கிறமாதிரி, ஆனந்தமாக இருப்பது என்பது முடிவு அல்ல; அது தான் உங்கள் வாழ்வின் முதல்ப்படி! ஆனந்தம் என்ற அடித்தளம் உறுதி யாக இருந்தால்தான் அதன் மீது உங்கள் வாழ்வு என்ற மாளிகை மலர முடியும். வாழ்வின் அடித்தளமான ஆனந்தம் உங்களிடம் தான் உருவாக வேண்டும்.இந்த உண்மையை உண ராமல் அதைத்தேடி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

அடித்தளமே இல்லாத ஒரு வீட்டில் குடி இருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் தெரியுமா? வீட்டின் கூரையைக் கையில் தாங்கிக்கொண்டே உங்களால் எவ்வளவு நேரம் இருக்க முடியும்? சற்று நேரம் நீங்கள் தளர்ந்தால், உங்கள் தலைக்கு மேலேதான் எல்லாம் வந்து விழும்... இல்லையா?

நிலையான அஸ்திவாரம் அமைந்தால், அதன் மீது எவ்வளவு பெரிய மாளிகையையும் நீங்கள் கட்டிக் கொள்ளலாம்.

வாழ்க்கையும் இப்படித்தான்! நீங்கள் ஆனந்தமாக இருந்தால் உங்கள் விருப்பப்படி ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் இப்போது உங்களிடம் ஆனந்தம் என்னும் அஸ்திவாரமே இல்லாததால், வாழ்க்கையே பெரும் பாரமாகிவிட்டது. தினசரி செய்யும் வழக்கமான செயல்கள் கூட உங்களுக்குப் பெரும் சலிப்பையும் வேதனையையும் தரும் விடயங்களாக மாறிவிட்டன.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

16



4.நாடறியாத ஒரு படைப்பாளனையும் முதலாவது படைப்பிலேயே நல்லதொரு நாவலையும் அறிமுகமாக்கியது.

"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

5.மண்ணோடிணைந்த வாழ்க்கையின் இயல்பான உணர்வுகளைக்கொண்ட கன்னிமை நீங்காத காட்டுக்கிராம மணம் நிறைந்த நாவல்.

இன்று வன்னிப்பிரதேச நாவல்கள் பல வெளிவந்துள்ளன. அப்பிரதேச புராதன மக்களும் குடியேறிய மக்களும் அப்பிரதேச சமூக வாழ்க்கையும் அப்பிரதேச காட்டு மரங்களும் விலங்குகளும் பழக்க வழக்கங்களும் இந்த நாவல்க ளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. செங்கை ஆழியானின் பெரும்பாலான நாவல்கள் வன்னிப் பிரதேசப் பின்னணியைக் கொண்டவை. தண்ணியூற்றுக் கிராமத்தில் வெளியுலகம் அறியாமல் வாழ்ந்து வருகின்ற பதஞ்சலி என்ற கிராமப் பெண்ணை இலகுவில் பிறரால் கைப்பெற்றக் கூடிய நிலக்கிளியுடன் ஒப்பிட்டுச் சித்திரித்துள்ளார். இது ஒரு சுவையான கதை. இந்த நாவலில் தண்ணிமுறிப்புக்குளம் சார்ந்த காட்டுக்கிராம வருணனையுடன் தொடங்குகிறது. பதஞ்சலி, கதிராமன், கோணாமலையார், பாலியார் முதலான பாத்திரங்களை அவற்றின் இயல்பான சிறப்புக்களுடன் முரண்படாது இக்கதையில் காட்டியுள்ளார். உரையாடல்கள் வன்னி மண்ணுடன் இணைகின்றன. பதஞ்சலியின் வாழ்வில் சுந்தரலிங்கம் ஆசிரியர் குறுக்கிடுவது. இயற்கையோடு இணைந்த செயலாகப்படுகிறது. நிலக்கிளியின் பின்னர் பாலமனோகரன் எழுதிய குமாரபுரம், கனவுகள் கலைந்தபோது என்பன அவர் திறனை வெளிப்படுத்தவில்லை.

1970-1980 களில் வெளிவந்தவற்றில் சி.சுதந்தரராஜாவின் 'மழைக்குறி', எஸ்.ஸ்ரீ.ஜோன்ராஜனின் 'போடியார் மாப்பிள்ளை', கே.ஆர்.டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்று விட்டது',நந்தியின் 'தங்கச்சியம்மா' என்பன குறிப்பிட்டு விதைந்துரைக்கத் தக்கன. சி.சுதந்தரராஜாவின் மழைக்குறி ஒரு வர்க்கிய நாவல். முதலாளித்துவச் செயல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் போர்க்குரல் எழுப்புகின்றனர். சமகால அரசியல் பிரச்சனைகள் உரையாடல்களில் அலசப்படுகின்றன. கிழக்கிலங்கைப் பிரதேச நாவலாக ஜோன்ராஜனின் போடியார் மாப்பிள்ளை திகழ்கின்றது. மலையக நாவல்களில் முற்றிலும் வித்தியாசமான சித்திரிப்புள்ள நாவல் கே. ஆர்.டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது' ஆகும். இலங்கையின் இனப்பிரச்சனைச் சம்பவங்களை முதன் முதல் நாவலில் சித்திரித்தவர் அருளர் என்பவராவார். அவரின் 'லங்காராணி' அத்தகைய ஒரு நாவலாகும்.1970-1980களில் தி.ஞானசேகரனின் இரண்டு நாவல்களான 'புதியசுவடுகள்', 'குருதி மலை' என்பன இரண்டும் குறிப்பிடத் தக்கன. சாதிய நாவல்கள் வரிசையில் புதியசுவடுகளுக்குமுக்கிய பங்குள்ளது.

கடந்த ஐந்து தசாப்த ஈழத்தமிழ் நாவல் வரலாற்றில் தோட்டத் தொழிலாளாளரின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கனதியான நாவல்கள் சில வெளிவந்துள்ளன. 1962இல் வெளிவந்த நந்தியின் 'மலைக் கொழுந்து' மலையகநாவல் கதவுகளைத் திறந்து விட்டது எனலாம். மலையகத் தொழிலாளர்களின் துன்ப துயரங்களையும் தொழிலாளர் எழுச்சியையும் சித்திரிப்பதாக குருதிமலை அமைந்துள்ளது. இது மலையக நாவல்களின் தனித்துவமான பின்னணியைக் கொண்டது. தேயிலைத் தோட்டங்கள் அந்நியரிடமிருந்து தேசிய மயமாகிய காலத்தில் தொழிலாளர் களின் நம்பிக்கையான எதிர்பார்ப்பு க்களையும் அரசியல்வாதிகள் சிலரின் சந்தர்ப்பவாதங்களையும் அதன் காரணமாக இரு இனங்களுக்கிடையிலான உறவு விரிசல்களையும் அதனால் ஏற்படுகின்ற இழப்பையும் யதார்த் தமாக குருதிமலை சித்திரிக்கின்றது.

2005ஆம் ஆண்டு காலத்தினுள் ஈழத்தில் 479 நாவல்கள் நூலுருவில் வெளிவந்திருப்பதாகப் பட்டியலிட முடிகின்றது. எனினும் தோராயமாக 500நாவல்கள் ஈழத்தில் இதுவரை வெளிவந்திருப்பதாகக் கொள்ள முடியும். எனினும் கவனத்தில் கொள்ளத்தக்க ஒரு சோக அம்சமாகக் கருதக் கூடியது யாதெனில் இந்த 500 படைப்புக்களில் நாவல்கள் எனக் கருதக் கூடியதாக எத்தனை தேறும்


கலாநிதி செங்கைஆழியான்
க.குணராசா

என்பது தான். ஒரு இருபத்தைந்து கூடினால் ஐம்பது நூல்கள் தேறும் என்ற உண்மை நமக்கு கசக்கத்தான் செய்யும். பெரும்பாலானவை குறு நாவல்களாகத்தான் தேறுகின்றன.

குறுநவல்கள் என்ற துறைகளுக்கான வரைவிலக்கணம் என்ன? சம்பவங்களின் எண்ணிக்கை, பகைப்புலம்,பாத்திரங்களின் எண்ணிக்கை, காலநீட்சி, உருவஅளவு, உள்ளடக் கவிரிவு, (கதையின்விரிவு) நூலின் கனதி என்பனவற்றை அளவுகோலாகக் கொண்டு குறுநாவ லையும் நாவலையும் வகுக்க முடியும். சிறந்த நாவல்களையும் குறு நாவல்களையும் எடுத்து இவ்வா றுதான் அவை அமையும் எனவும் கூறிவிடமுடியும்.

(14 ஆம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் மத்தி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான நிர்வாகத்தினால் பொன். கந்தசாமிக்கு அண்மையில் ***ஓதுவார் திலகம்*** எனும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினால் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்படுவதையும் சட்டவிரிவுரையாளர் சோதிநாதன் ஆசியுரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் குறித்து சோதனை

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யும் உணவு பொருட்களில் கதிரியக்க தாக்கங்கள் கலந்துள்ளனவா? என்பது குறித்து ஆராய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அணு சக்தி அதிகார சபையின் ஊடாக இதற்கான சோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அணு சக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ அபேவிக்ரம தெரிவிக்கையில்,

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்களை சாதாரண நிலையிலும் பார்க்க அதிக கவனம் செலுத்தி சோதனை செய்ய உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி அந்த பொருட்களில் கதிரியக்க தன்மை சேர்ந்திருக்குமாயின் அந்த பொருட்களின் இறக்குமதி கைவிடப்படும் என அவர் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பான இறுதி தீர்மானம் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# அதிக வாக்குகளை பெற்றோருக்கே உள்ளூராட்சி மன்ற தலைவர் பதவி

## த.தே.கூ. அறிவிப்பு

நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் 12 சபைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

கைப்பற்றிய 12 சபைகளுக்குமான தலைவர்களை தெரிவு செய்வது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த வாரம் கூடி ஆராயவுள்ளதென மட்டு. மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயம் தொடர்பாக நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடிப் பேசவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெற்றி பெற்றுள்ள 74 பேரினதும் சத்தியப் பிரமாணத்தினை ஒன்றாக ஓரிடத்தில் நடத்துவதா அல்லது அந்தந்த மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் அந்தந்த மாவட்டத்திலேயே சத்தியப் பிரமாணம் செய்வதா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படவுள்ளது. அத்தோடு கைப்பற்றிய 12 சபைகளுக்குமான சபைத் தலைவர்கள் யாரென்பது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் இரு சபைகளுக்கான தலைவர்கள் குறித்து பிரச்சினை ஏற்படப் போவதில்லை. ஏனெனில் பிரசாரத்தின் போது அதிகூடிய வாக்குகளை பெறுபவர்களுக்கே தலைவர் பதவி வழங்கப்படுமென தெரிவித்தோமெனவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணிக்கு பின்னடைவு

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா பின்னர் அரசாங்கத்தில் இணைந்து கொண்டார்.

அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணி முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டது.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் துணுக்காய் பிரதேச சபைக்கான வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதுடன் கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன.

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கான தேர்தல் மட்டுமே நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பிரஜைகள் முன்னணி கட்சி 57 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வன்னி இறுதிப்...

*(07ஆம் பக்கத் தொர்ச்சி...)*

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் கிபிர் விமானங்களின் பங்கு அளப்பரியது. கணனிமூலம் குண்டு வீசும் வசதிகளை இக் கிபிர் விமானங்கள் கொண்டிருந்தன.

1991இல் சீனாவிடம் இருந்து விமானப்படை நான்கு எவ் 7 ரக விமானங்களைக் கொள்வனவு செய்ததுடன், 2008இல் மேலும் நான்கு எவ் 7 ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தற்போது அவ் விமானங்களில் பெரும்பாலானவை வான் இடைமறிப்பு ரேடர்கள் பொருத்தப்பட்ட முக்கிய போர் விமானங்களாக உள்ளன. இவற்றில் நான்கு வெப்ப ஈர்ப்பு ஏவுகணைகளைப் பொருத்தும் வசதிகளைக் கொண்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படையை முறியடிக்கவே ஐந்தாவது இலக்க ஜெட் ஸ்குவாட்ரன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விமான அணி எட்டு எவ் 7 ரக விமானங்களைக் கொண்டுள்ளது. நான்காவது கட்ட ஈழப்போரில் இவ் விமானங்கள் 400 தாக்குதல்களை மேற்கொண்டன.

விங் கொமாண்டர் சம்பத் விக்கிரமரத்ன தலைமையிலான ஐந்தாவது இலக்க விமான அணி வவுனியாவில் தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது வெப்ப ஈர்ப்பு ஏவுகணைமூலம் விடுதலைப்புலிகளின் முதலாவது விமானத்தை சுட்டு வீழ்த்தியது.

விமானப்படை தற்போது 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட பலமானதொரு படையாக உள்ளதுடன், அதன் அத்தனை தளங்கள் மற்றும் பிரிவுகளின் பாதுகாப்புக்கும் பொறுப்பாக உள்ளது.

ஒன்பதாவது இலக்க விமான அணியில் உள்ள எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் கூட விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்துள்ளன. நான்காவது கட்ட ஈழப்போரில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 400க்கும் அதிகமான தாக்குதல்களை இந்த உலங்கு வானூர்திகள் மேற்கொண்டன.

படைத்தரப்பினருக்கு மிகவும் நெருக்கமாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது இந்த உலங்கு வானூர்திகள் அதிகம் பயன்பட்டன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய உலங்கு வானூர்திகள் அந்த இடங்களிலேயே தரையிறக்கப்பட்டு, திருத்தப்பட்டு தளங்களுக்கு கொண்டு வரப்பட்டன.

ஒன்பதாவது இலக்க விமான அணி படைத்தரப்பின் ஆழஊடுருவித் தாக்கும் அணிகளை நான்கு தட வைகள் மீட்டு வந்தது. படைத்தரப் பின் ஆழ ஊடுருவும் அணிகள் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட இலக்குகளை குறிவைத்து அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவின.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கும் சரத்பொன்சேகாவின் ஒட்டுமொத்த தந்திரோபாயத்திற்கு அமைவாகவே ஆழ ஊடுருவும் அணிகள் களமிறக்கப்பட்டிருந்தன.

உக்ரேனிடம் இருந்து குத்தகைக்குப் பெறப்பட்ட மூன்று எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்குவானூர்திகளுடன் 1995 நவம்பரில் உருவாக்கப்பட்ட ஒன்பதாவது இலக்க விமான அணி இப்போது 14 உலங்குவானூர்திகளைக் கொண்ட அணியாக உள்ளது.

விடுதலைப்புலிகளின் விமானப் படையை முறியடிக்கும் நோக்கில் விமானப்படை இலக்கம் 32 வான் பாதுகாப்புப் பிரிவு 2006இல் உருவாக்கப்பட்டது. விமானங்களைக் ரேடர்களுடன் இணைந்த பீரங்கிகளை இந்த வான்பாதுகாப்புப் பிரிவு பயன்படுத்தியது. அத்துடன் சீனாவிடம் முப்பரிமாண ரேடர் கொள்வனவு செய்யப்பட்டதும் இதன் பலம் அதிகமானது என றொஷான் குணதிலக தனது செவ்வியில் தெரிவித்துள்ளார். □

# நாடு முழுவதிலும் மக்கள் சபைகள் உருவாக்கம்

நாடு முழுவதிலும் மக்கள் சபைகள் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் நாடு முழுவதிலும் மக்கள் சபைகள் உருவாக்கப்படவுள்ளதாகவும் இந்த மக்கள் சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப் படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கண்காணிப்பில் இந்த மக்கள் சபைகள் இயங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சபை மத்திய அரசாங்கத்திடமிருந்து நேரடியாக நிதியைப் பெற்றுக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் இயங்கும் எனக் குறிப்பிடப் படுகிறது. (ஸ்ரீ-2)

# பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனை யாளர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 4.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் அ. அல்பேட் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி (பத்மநாபா) யின் பிரதிநிதி தோழர் சிவராசா மோகன் கலந்து கொள்வார்.

அன்றைய தினம் சகல நிலையங்களையும் முழுமையாகப் பூட்டி அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கிளைச் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பேரவை தமிழினத்தின் உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்!

இலங்கை அரசாங்கத்தால் நியமிக் கப்பட்டுள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவினை, போர் மீறல்கள் தொடர்பாக பதிலளிக்க வேண்டிய பொறுப்பு விவகாரங்களுக்குரிய நம்பகமான தேசியப் பொறிமுறையாகக் கொள்ள முடியாது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆய்வாளர் யோலாண்டா போஸ்ரர் தெரிவித்துள்ளார்.

'இலங்கையில் ஆளுந் தரப்புகளால் முன்பு நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் செயல்வலு அற்றவையாகவே இருந்திருக்கின்றன; தற்போதைய நல்லிணக்க ஆணைக்குழுவிற்கான அதிகார வரைமுறை தெளிவற்றதாகவே உள்ளது; சாட்சியமளிப்போருக்கான சட்டப்பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தன்மை தொடர்பான பெருங் குறைபாடுகளையும் இது கொண்டிருக்கின்றது.' என ஆய்வாளர் போஸ்டர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தனக்கெதிரான அனைத்து விமர்சனங்கள், எதிர்ப்புகளை அடக்கிவரும் இலங்கை அரசாங்கம் எந்தவொரு விசாரணை ஆணைக் குழுக்களையும் சுயாதீனமாக இயங்க அனுமதித்ததில்லை. இந்நிலையில் இலங்கை அரசின் உண் மைகளை கண்டறிவதற்கான நல்லி ணக்க ஆணைக்குழுவும் விதிவிலக் கல்ல எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுனர்குழு தொடர்பாக சிறிலங்கா கார்டியனில் அவர் எழுதிய ஆய்வுக்கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. அக்கட்டுரையின் முக்கியபகுதிகளை இங்கே தருகின்றோம்.

2009இல் போர் முடிவடைந்ததையடுத்து போர்நடவடிக்கைகள் சார்ந்து பதிலளிக்கவேண்டிய பொறுப்பு விவகாரங்களுக்கான இருபெரும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஒன்று இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு (Lessons Learned & Reconciliation Commission, LLRC) மற்றையது ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட அனைத்துலக பரிமா ணங்கொண்ட நிபுணர் குழுவாகும். (UN Panel on SriLanka).

கற்றுக்கொண்ட பாடங்களைக் கண்டறியும் இன நல்லினக்க ஆணைக்குழு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் மே மாதம் 2010இல் நியமிக்கப்பட்டது. இவ் ஆணைக்குழு முன்னிலையில் கொழும்பு மற்றும் வடக்கு -கிழக்கில் பல்வேறு தரப்பினரிடமிருந்து சாட்சியங்கள் பெறப்பட்டன.

பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் இந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளமை, போர்மீறல்கள் சார்ந்த பொறுப்பு விவகாரங்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்ற போதிலும், அவ்வாறான அதிகாரமுள்ள பொறி முறையாக நல்லிணக்க ஆணைக்குழு இல்லை என்பதே உண்மையாகும்.

பொதுமக்களிடத்தும். நிபுணத்துவப் பின்னணி உடையவர்களிடம் இருந்தும் இனமுரண்பாட்டிற்கான மூலகாரணிகள் பற்றிய கருத்துக்களை சேகரிப்பதும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்குரிய படிநிலை செயற் திட்டங்களைப் பரிந்துரைப்பதுமே இந்த ஆணைக்குளுவின் முதன்மைப் பணியாக உள்ளது.

மனிதவுரிமை மீறல்கள் அல்லது மனிதாபிமான சட்டமீறல்கள் மற்றும் வன்முறைசார்ந்த குற்றங்களுக்கும் பதிலளிக்கும் பொறுப்பு விசாரணைக்கான நிபந்தனைகளை விதிக்கும் அதிகாரம் இந்த ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வில்லை. அத்தோடு ஐந்துமாதகாலமாக இடம் பெற்ற விசாரனைகளில் இவை தொடர்பான விவகாரங்கள் சார்ந்த அக்கறையை நல்லிணக்க ஆணைக் குழு கொண்டிருக்கவும் இல்லை.

திட்டமிட்ட வகையில் காணாமற் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் போன்ற மீறல்கள் பற்றிய முறைப் பாடுகளைப் பொதுமக்கள் முன் வைத்த வேளைகளில் அவை ஆணைக் குழுப் பிரதிநிதிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை. காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் உறவினர்களுக்கு உதவுதல், சித்திர வதைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பாக அறிதல் மற்றும் குற்றம் இழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துதல் போன்ற விடயங்களில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்று நோக்குமிடத்து அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன.

இலங்கையின் முன்னைய பல்வேறு ஆணைக்குழுக்கள் செயல்வலு அற்றவையாகவே இருந்திருக்கின்றன என்று இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். அத்தோடு தற்போதைய நல்லிணக்க ஆணைக்குழுவிற்கான அதிகார வரைமுறை தெளிவற்றதெனவும், சாட்சியமளிப்போருக்கான சட்டப்பாதுகாப்பு மற்றும் சுயாதீனத் தன்மை தொடர்பான குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, உள்ளக பொறிமுறைகள் மற்றும் நடை



முறைகளை மேம்படுத்த உதவுவதைத் தவிர, நீதியை நிலைநாட்ட வழி வகுக்கப் போவதில்லை.

நீதியை நிலைநாட்டுவதற்கு உரியனவாக இலங்கையின் உள் நாட்டு விசாரணைக் குழுக்கள் தொழிற் படவில்லை. காலத்திற்குக் காலம் பல்வேறு விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்ட போதும் மனித உரிமை மீறல்களுக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படாத நிலை பல தசாப்தங்களாகத் தொடர்கின்றது.

## சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வாளர் யோலாண்டா போஸ்ரர்

எல்லாவற்றிற்கும் மேலாக தனக்கெதிரான அனைத்து விமர்சனங்கள், எதிர்ப்புகளை அடக்கிவரும் இலங்கை அரசாங்கம், எந்தவொரு விசாரணை ஆணைக்குழுக்களையும் சுயாதீனமாக இயங்க அனுமதித்ததில்லை. இந்நிலையில், இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான இன நல்லிணக்கக் குழுவும் விதிவிலக்கல்ல.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்பாட்டில் நிகழ்ந்த தவறுகள் பற்றியும் இன நல்லிணக்கத்தை சிறந்த முறையில் ஏற்படுத்தும் வழிவகைகள் குறித்தும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் சமூகப் பிரமுகர்களிடம் நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களைக் கோரியிருந்தது. விசாரணைகளின் ஆரம்பத்தில், 'பொது மக்கள் இழப்பு ஒன்றேனும் நிகழவில்லை' மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போர் 'மனிதாபிமான மீட்பு நடவடிக்கை' என்பதான கருத்தினை ஒப்புவிக்கக் கூடிய அரசாங்க அதிகாரிகளே அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்தினுடைய பொதுமக்கள் இழப்பு தொடர்பான தவறான கணக்கு விபரங்கள், தகவல்கள் பற்றிய விளக்கங்களையேனும் ஆணைக்குழு கோரவில்லை. 2009ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வன்னியில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான பொதுமக்களே இருந்ததாக அரசாங்கம் மீண்டும் மீண்டும் கூறியமை, இவற்றில் அதிகம் விசனத்திற்குரியதாகும். ஆனால் போர் முடிவடைந்த தறுவாயில் 3 இலட்சம் மக்கள் அங்கிருந்தமையை அரசாங்கம் ஒப்புக் கொண்டது. அத்தோடு பொதுமக்கள் இருந்த பகுதிகளில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்தமையும் விசனத்திற்குரியதாகும்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் போர் மீறல்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமையாது என்ற நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அனைத்துலக நியமங்களுக்கு ஏற்ப நீதியை நிலைநாட்டும் வகையில் பொறுப்புடன் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்மாத இறுதியில் கையளிக்கப்பட்டவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உட்பட்ட ஏனைய ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், நிபுணர் குழுவினால் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகளை நுணுக்கமாக ஆராய்வதோடு இலங்கை மக்களின் உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அந்த ஆய்வுக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

◆ ◆

# தமிழ் நாவல்கள் சில......

ஈழத்தின் நாவல்கள் என்பன பெரும்பாலும் 120-150 பக்கங்களுக்குள் அமைந்துவிடுகின்றனவாக அமைந்திருக்கின்றன. உலக நாவல்களும் தமிழக நாவல்களும் அவற்றின் கனதியில் பிரமிப்பைத் தருகின்றன. சலியாது தமது நாவல்களைப் பரந்த களத்தில் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிவிடுகின்றார்கள். ஜெயகாந்தனின், (பாரிசுக்குப்போ) ஜானகிராமனின், (அம்மா வந்தாள்) நா.பார்த்தசாரதி,(குறிஞ்சிமலர்) அகிலன், (வேங்கையின் மைந்தன்) கல்கி,(அலைஓசை) ராஜம்கிருஷ்ணன், (குறிஞ்சித்தேன்) நீலபத்மநாதன், (தலைமுறைகள்) ஜெயமோகன், (கொற்றவை) முதலானோரின் நாவல்களுக்கு நிகராக (கனதியில்) ஒரு நாவலை எங்களால் தூக்கிப் போடமுடியாது. நூற்றுக் கணக்கான பாத்திரங்களை முரண்படாது வளர்த்து, பல சம்பவங்களைப் பெய்து, நீண்டகால நீட்சியோடு, சில இடங்களின் பல தலைமுறைகளை விபரித்து, அவர்கள் தமது நாவல்களை எழுதியுள்ளனர். அவற்றின் தரம் தரமின்மை வேறு விடையம்

500 பக்கங்களுக்கு மேல் கொண்ட ஒரு பாரிய படைப்பு ஈழத்தில் நாவலாக வெளிவராதா என்பது நமது எழுத்தாளர் நந்தியின் கனவாக இருந்தது. இரு குடும்பங்களிடையே நடக்கின்ற இரண்டு வாரநிகழ்வுகளை விபரிக்கின்ற சொர்க்கனின் 'சீதா' நாவலா? குறுநாவலா? கடலில் இறங்கி இறுமாப்போடு தனது தள்ளாத வயதிலும் கடைசிவரை போராடிச் சுறாமீனைப் பிடித்து வருகின்ற கிழவனை விபரிக்கும் நோபல் பரிசு பெற்ற ஹெமிங்வேயின் கடலும் கிழவனும் என்ற 150 பக்கங்கள் கொண்ட படைப்பு நாவலாகாதா? எனவே படைப்புக்கள் பக்க அளவில் குறைந்தவையாக அமைந்தாலும் அவை விபரிக்கும் களம், பாத்திரவார்ப்பு, காலநீட்சி, உள்ளடக்கம், சம்பவங்களின் தொகை, என்பனவற்றைக் கொண்டு அவை நாவலாகக் கருதப்படலாம்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய தேசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் நிடின் கட்காரியினால் தேசிய மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு பதிலளிக்கும் வகையிட்டுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சுமார் 500 தமிழக மீனவர்களை கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பாரதீய ஜனதா கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதனை தடுத்து நிறுத்த மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் முனைப்பு காட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சர்வதேச பௌத்த மாநாடு ஆரம்பம்

2600ஆவது புத்த ஜெயந்தி சம்பந்தமாக சர்வதேச பௌத்த மாநாடு பல்லேகலையில் நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறுகின்றது.

இந்தோனேசியா, மியன்மார், கம்போடியா உட்பட 6 பௌத்த நாடுகளைச் சேர்ந்த மதகுருமார்களும் கல்விமான்களும் இதில் பங்கேற்கின்றனர். இந்திய அரசாங்கம் இதற்கு அனுசரணை வழங்கியுள்ளது. மாநாட்டுடன் இணைந்த தாக விசேட கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/வடமராட்சி இந்துக் கல்லூரியின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

எனவே, பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் கப்பல் பாதையினை உபயோகித்து மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கென இலங்கை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களமும் மாலைதீவு தேசிய மத்திய பணியகமும் கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றன.

இரு நாடுகளையும் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டவென சகல தகவல்களையும் பரஸ்பரம் பரிமாற்றிக் கொள்வதென்று 2009ஆம் ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-9)

# நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

(நேற்றைய தொடர்ச்சி)

**13 வயதின் கீழ் ஆண்கள்**

**200 மீற்றர்**

எஸ்.சரமிளன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.விதுசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.டிலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**15 வயதின் கீழ் ஆண்கள்**

**200 மீற்றர்**

எஸ்.கோவர்த்தனன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.விஸ்ணுதரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.நிதூஷன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண ம.வி.)

**400 மீற்றர்**

எம்.கோகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.டிசாந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.வினோஜ் (பெரியபுலம் ம.வி.)

**உயரம் பாய்தல்**

ஆர்.செந்தூரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.தினேஸ்குமார் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.துஷியந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**குண்டு எறிதல்**

எஸ்.மகிந்தன் (முத்துத்தம்பி ம.வி.), எம்.கோபிநாத் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.இந்துசன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

ஆர்.விதுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.சீவகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.சிந்துஜன் (பெரியபுலம் ம.வி.)

**4x100 மீற்றர் அஞ்சல்**

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, பெரியபுலம் ம.வி.

**17 வயதின் கீழ் ஆண்கள்**

**200 மீற்றர்**

கே.பவித்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.பிரஷாத் (கனகரட்ணம் ம.ம.வி.), ஜெ.ஜிவிந்தன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி)

**400 மீற்றர்**

எஸ்.மயூரதன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஏ.கௌசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.கரிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

எஸ்.சுவஸ்திகன் (நல்லூர் இ.த.க.பாடசாலை), எஸ்.விசாகன் (கனகரட்ணம் ம.ம.வி.), ஏ.அன்றூஸ் (யாழ்.இந்துக் கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

எஸ்.சுதர்சன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி), ஏ.அரவிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.ருக்ஸ்மன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**1500 மீற்றர்**

எஸ்.சிவகாந் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.தேவராஜன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ்.கரிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

என்.திலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.நிமால் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என்.சாகித்தியன் (பெரியபுலம் ம.வி.)

**4x400 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி.)

**நீளம் பாய்தல்**

எஸ்.கோகுலன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.சுபஸ்ரிகன் (நல்லூர் இ.த.க. பாடசாலை), என்.திலக்சன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

எஸ்.சாந்தனேஸ்வரன் (பெரியபுலம் ம.வி.), கே.பிரவினன் (கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா ம.வி.), எஸ்.விசாகன் (கனகரட்ணம் ம.ம.வி.)

**19 வயதின் கீழ் ஆண்கள்**

**400 மீற்றர்**

ஜி.சிவேந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.டிஸ்மன் (கனகரட்ணம் ம.ம.வி.), ஈ.ஜெசிந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

வீ.யஸ்மிலன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.கஜீபன் (கனகரட்ணம் ம.ம.வி.), எஸ்.குருநாத் (கோண்டாவில் இ.ம.வி.)

**உயரம் பாய்தல்**

கே.தனுஷன் (கனகரட்ணம் ம.ம.வி), வீ.தர்மிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.டஜன்ஜன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**குண்டு எறிதல்**

கே.ராகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.டிலக்ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.பிரணவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**4x400 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி., முத்துத்தம்பி ம.வி.

**21 வயதின் கீழ் ஆண்கள்**

**400 மீற்றர்**

எஸ்.அருண்குமரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), கே.கடற்கஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஏ.அனுராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

கே.விதுஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.கஜீபராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

ஆர்.சதீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.துவாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.ரகுபரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

ஜி.பிரகாஷ் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜி.சஞ்ஜீவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.அனுராஜ் (கனகரட்ணம் ம.ம.வி.)

**4x100 மீற்றர் அஞ்சல்**

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி.

**4x400 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி.

(தொடரும்)

# பங்குச்சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் அதிக இலாபத்தை பெறமுடியும்

## முன்னாள் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர்-யுவதிகளுக்கு புதிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அதிக இலாபத்தையும் பெற்றுக் கொடுக்கும் துறையாக பங்குச்சந்தை வியாபாரம் விளங்குகிறது என முன்னாள் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளரும் இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட ஓய்வூதிய சங்கத்தின் தலைவருமான என்.சிவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இலங்கை யாழ்.மாவட்ட ஓய்வூதிய சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பங்குச் சந்தை வியாபாரத்திற்கான அறிமுக கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பங்குச் சந்தை வியாபாரமானது ஓர்அறிமுகமில்லாத துறையாகவே காணப்படுகிறது.

இந்தத் துறையில் முதலீடுகளைச் செய்ய விரும்புவர்கள் வீட்டில் இருந்தவாறு கணனி மூலம் நேரடியாக தொடர்புகொள்ள முடியும்.

மேலும் இங்குள்ளவர்கள் வங்கிகளில் வைப்பிடவே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதன்மூலம் கிடைக்கும் வட்டி வீதத்தை விட பல மடங்கு அதிகமாக பங்குச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் பெறமுடியும் என்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

மேலும் இளைஞர் யுவதிகளுக்கு புதிய தொழிற்துறையாக விளங்குவதோடு வேலை செய்பவர்கள் தொடக்கம் வேலை தேடுபவர்கள் வரை இந்தத் துறைமூலம் அதிக இலாபத்தை பெற முடியும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக்கலந்துரையாடலில் விரிவுரையாளர்களான எஸ்.ஸ்ரீசேதுபரன், ஆர்.ராஜேஸ்வரன், பங்குச்சந்தை வியாபார ஆலோசகர் நிறஞ்சன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதில் பொதுமக்கள், அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2-6)

# உள்ளூராட்சி சபைகளுக்கு புதிதாக தெரிவான உறுப்பினர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள்

உள்ளூராட்சி சபைகளுக்கு புதிதாக தெரிவான உறுப்பினர்களுக்குக் கூடிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை வழங்கக் கூடிய புதிய சட்டவிதிமுறைகளை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச தரப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, உள்ளூராட்சி சபைகளுக்கு அரச நிதி ஆணைக்குழுவினால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் நிதியானது உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கே ஒதுக்கீடு செய்யும் முறையொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது எனவும் கூறப்படுகிறது.

அதற்காகக் கூடிய விரைவில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு தேர்தல் எல்லைக்குட்பட்ட பகுதிகளைப் பிரித்து வழங்குவதும் புதிய சட்டத்தின் நோக்கம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு வேண்டிய புதிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் அணு உலைகளை குளிரூட்டும் பணி தொடர்கிறது



(டோக்கியோ)

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தின் ஆறு உலைகளையும் குளிரூட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நிலையத்தின் அருகில் உள்ள பண்ணைகளில் உற்பத்தியாகும் கீரைகள் மற்றும் பால் வகைகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கதிர்வீச்சின் பாதிப்பு அதிகளவில் இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஜப்பானில் நேற்று முன்தினம் மீண்டும் 6.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

புகுஷிமா அணுமின் நிலையத்தில் ஆறு உலைகளுக்கும் நிலையத்தின் வெளிப்புறத்தில் இருந்து மின்சார விநியோகம் கொடுத்து அதன் மூலம் நீரை உட்செலுத்தும் பம்புகளை இயங்க வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாம் எண் உலையில் யுரேனியத்தோடு அதிக அபாயம் கொண்ட புளுட்டோனியமும் இருப்பதால் தீயணைப்பு இயந்திரங்கள் தொடர்ந்து கடல் நீரை அதன் மீது பீச்சியடித்து வருகின்றன. தற்போது 300 பணியாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உலைகளில் வைக்கப் பட்டுள்ள யுரேனியம் மற்றும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட யுரேனியம் என இரண்டு வகை எரிபொருட்களில் இருந்து வெளிவரும் வெப்பத்தைத் தணிக்கும் சவாலான காரியத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மின்சாரம்மூலம் பம்புகள் இயங்கினாலும் கூட உலைகளின் வெப்பம் தணியுமா என்பது சந்தேகமே. தற்போது 6ஆம் எண் உலையில் டீசல் ஜெனரேட்டர் மூலம் பம்புகள் இயக்கப் பட்டு வருகின்றன. உலைகள் தொடர்ந்து செயற்படுமா அல்லது மூடப்படுமா என்பது இன்னும் ஓரிரு நாட்களில் தெரிந்து விடும்.

**நிபுணர்கள் கருத்து**

இந்தக் குளிரூட்டும் செயற்பாடுகள் குறித்து நிபுணர்கள் சிலர் கூறியதாவது,

நிலநடுக்கத்தால் அணு உலைகளில் இருந்து யுரேனியக் கம்பிகள் ஒன்றுடன் ஒன்று இடிபட்டு உடைந்து போய்விட்டன. உடைந்த அவற்றில் இருந்து தொடர்ந்து கதிர்வீச்சு வெளிப்பட்டுக் கொண்டே உள்ளது. எவ்வளவுதான் நீரை ஊற்றினாலும் அவ்வளவு சீக்கிரத்தில் ஆறாது. நீர் ஊற்றும் பணி பல மாதங்களுக்கு நடக்க வேண்டும்.

அப்படியே நீரை ஊற்றினாலும் வெளிப்படும் வெப்பம் அதை காணாமல் செய்து விட்டு கதிர்வீச்சை அதிகமாகத்தான் வெளியிடும். வெப்பத் தணிப்பு முறை ஓரளவு முறையாகச் செயற்பட ஆரம்பமாகி வெற்றி கிட்டினால் இந்த உலைகள் தொடர்ந்து செயற்படும் வாய்ப்புகள் அதிகம்.

முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தால் செர்னோபிள் அணு உலையில் நடந்ததைப் போல மணல் மற்றும் கொங்கிரீட் கலவையைக் கொட்டி ஒரேயடியாக சமாதி கட்டி விட வேண்டியதுதான் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**கீரை மற்றும் பாலில் கதிர்வீச்சு**

ஜப்பான் அமைச்சரவை தலைமைச் செயலர் யுக்கியோ எடானோ நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து 30 கி.மீ வட்டாரத்தில் சேகரிக்கப்பட்ட பால் மற்றும் 50 இருந்து 65 கீ.மீ வட்டாரத்தைச் சேர்ந்த கீரை இவற்றில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகளவில் கதிர்வீச்சு கலந்துள்ளது.

எனினும் இவற்றால் உடனடியாக ஆபத்து எதுவும் நேராது. தொடர்ந்து அப்பகுதி உணவுப் பொருட்கள் மீதான ஆய்வு நடக்கும். ஒரு வேளை மிக மோசமான அளவில் கதிர்வீச்சு கலந்திருப்பது கண்டறியப்படுமானால் அப்பகுதியைச் சேர்ந்த உணவுப் பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுவது நிறுத்தப்படும் என்றார்.

**மீண்டும் நிலநடுக்கம்**

புகுஷிமா மாகாணத்தின் தெற்கில் உள்ள இபாராக்கி மாகாணத்தில் நேற்று 6.1 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. டோக்கியோவில் உள்ள கட்டடங்கள் குலுங்கின. டோக்கியோ விமான நிலையம் சிறிது நேரத்துக்கு மூடப்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

**அமெரிக்கா எச்சரிக்கை**


கதிர்வீச்சு கசிவு தற்போது அமெரிக்காவின் கலிபோர்னியா, பிரிட்டன் வரை பரவியிருப்பதால் புகுஷிமாவின் 80 கி.மீ. வட்டாரத்தில் அமெரிக்கர்கள் யாரும் வசிக்க வேண்டாம் என்றும் ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்ளும் திட்டத்தைக் கைவிடும் படியும் அமெரிக்கா தனது குடிமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த ஆய்வில் டோக்கியோவில் நிர்ணயிக்கப்பட்டதை விட குறைந்தளவில் கதிர்வீச்சு இருந்தது கண்டறியப்பட்டது. சர்வதேச அணுசக்தி முகவரகம் வெளியிட்ட அறிக்கையில் 47 ஜப்பானிய நகரங்களில் இருந்து வந்த அறிக்கைகளின் படி கதிர்வீச்சு அபாய அளவில் இல்லை என்பது தெளிவாகியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# லிபியாமீது போர் தொடுத்தது அமெரிக்கா; போர் விமானங்கள் மூலம் சரமாரி குண்டுவீச்சு

## 48 பேர் பலி; 150 பேர் காயம்



(வோஷிங்டன்)

ஆபிரிக்கக் கண்டத்தை சேர்ந்த லிபியாவில் நடைபெற்று வரும் ஜனாதிபதி ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர ஆர்ப்பாட்டக்காரர்கள் கலவரம் நடத்தி வருகின்றனர்.

அவர்களை அடக்குவதற்காக ஜனாதிபதி கடாபி இராணுவ விமானங்கள் மூலம் குண்டுகளை வீசிக்கொண்டு வருகிறது. இந்நிலையில் அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க ஐ.நா பாதுகாப்பு சபை அனுமதியளித்ததையடுத்து பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளை சேர்ந்த போர் விமானங்கள் லிபியாவின் பென்காசி நகரில் பிரேசில் விமானங்கள் குண்டுமழை பொழிந்து இதனையடுத்து அமெரிக்காவும் இராணுவ நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஒபாமா தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து லிபியா அருகே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கா விமானந்தாங்கி போர் கப்பல்களில் இருந்து புறப்பட்ட போர் விமானங்கள் லிபியா மீது சரமாரியாக குண்டுகளை வீசின. கப்பலில் இருந்து ஏவுகணைகளும் வீசப் பட்டன. அமெரிக்காவுடன் இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளும் சேர்ந்து லிபியா மீது தாக்குதலை நடத்தின. தலைநகரம் டிரிபோலி மற்றும் பெங்காசி, சிர்ட், பிசரதா, சுவாரா ஆகிய நகரங்களிலும் குண்டுகள் வீசப்பட்டன. இவை தவிர, லிபியா படைகள் முகாமிட்டுள்ள பல்வேறு இடங்களிலும் தாக்குதல் நடந்தன. மொத்தம் 20 இடங்கள் குறிவைத்து தாக்கப்பட்டன. லிபியாவை சுற்றி அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, கனடா நாடுகளில் 25 போர் கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கி கப்பல்கள் நிறுத்தப்பட்டு இருந்தன. அவற்றில் இருந்து 110 ஏவுகணைகள் லிபியா மீது ஏவப்பட்டன.

லிபியா மீது முதல் முதலில் பிரான்ஸ் விமானம்தான் குண்டு வீசியது. அதை தொடர்ந்து மற்ற நாட்டு விமானங்கள் குண்டு வீசின. குண்டு வீச்சில் லிபியாவின் ஏராளமான இராணுவ டாங்கிகள், பீரங்கிகள், கவச வாகனங்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்க கூட்டுப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இதை லிபியா மறுத்து உள்ளது.

அமெரிக்க கூட்டு படைகள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளது. இதில் 48 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். 150 பேர் காயமடைந்து உள்ளனர் என்று லிபியா அறிவித்து உள்ளது. அமெரிக்க கூட்டுப் படைகளின் தாக்குதல் தொடர்வதை வரவேற்கும் வகையில் புரட்சிப்படையினர் வீதிகளில் நடனமாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதேவேளை லிபியா மீது அமெரிக்க கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தியமைக்கு இந்தியா, சீனா மற்றும் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

# 6 ஆண்டுகளுக்குமுன் அனுப்பிய விண்கலம் புதன் கிரகத்தை அடைந்தது

(வோஷிங்டன்)

புதன் கிரகத்தை பற்றி ஆராய்வதற்காக 6 ஆண்டுகளுக்கு முன்பு விண்ணில் செலுத்தப்பட்ட மெசஞ்சர் விண்கலம் 790 கோடி கி.மீ. தொலைவுக்கு பயணம் செய்த பின் புதன் கிரகத்தை அடைந்தது. இந்த கிரகத்தை கடந்த வியாழக்கிழமை முதல் சுற்றத்தொடங்கி உள்ளது.

**சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம்**

சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்களில் ஒன்று புதன். இது சூரியனுக்கு அருகில் உள்ள கிரகம் ஆகும். இந்த கிரகத்தை பற்றி ஆராய்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி கழகம் மெசஞ்சர் என்ற பெயரிலான விண்கலத்தை 6 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பியது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இது விண்ணில் செலுத்தப்பட்டது. இது 6 ஆண்டுகளில் 790 கோடி கிலோமீற்றர் தொலைவு விண்வெளியில் பயணம் செய்து புதன் கிரகத்தை அடைந்து உள்ளது. அதன் சுற்றுப்பாதையை அடைந்த இந்த விண்கலம் கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணி முதல் புதன் கிரகத்தை சுற்றிவர தொடங்கி உள்ளது.

புதன் கிரகத்தை ஒரு விண்கலம் சுற்றி வருவது இது தான் முதல் முறை ஆகும். இது அறிவியல் சாதனையாக கருதப்படுகிறது.

அடுத்த சில வாரங்களில் இந்த விண்கலத்தில் உள்ள அனைத்து சிஸ்டங்களும் சிறப்பாக செயல்படுகின்றனவா என்பதை நாசா பொறியியல் வல்லுநனர்கள் உறுதி செய்து கொள்வார்கள்.

இந்த விண்கலத்தில் 7 விஞ்ஞானக் கருவிகள் எடுத்து வரப்பட்டு உள்ளன. இந்த கருவிகள் அனைத்தும் நாளை மறுதினம் தொடக்கம் செயல்படத் தொடங்கும். எதிர் வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி விண்கலத்தின் அடிப்படை செயற்பாடு தொடங்கும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மெசஞ்சர் விண்கலம் சூரியனில் இருந்து 4கோடியே 60 இலட்சம் கி.மீ.தொலைவிலும், பூமியில் இருந்து 15 கோடியே 50 இலட்சம் கி.மீ. தொலைவிலும் உள்ளது. புதன் கிரகம் சூரியனுக்கு மிக அருகில் உள்ள மிகச்சிறிய கிரகம் என்பதால் இதன் வெப்ப நிலை அதிகம் ஆகும். (ஸ்ரீ-2)

# பாக் - சீனா முதன்முறையாக கூட்டு விமானப் பயிற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மற்றும் சீனாவின் விமானப் படை பிரிவுகள் முதல்முறையாக இணைந்து போர் விமானக் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடவுள்ளது.

இந்தக் கூட்டுப்பயிற்சிக்கு கடவுளின் பெயரான ஷாஹீன்-1 என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பாகிஸ்தானில் சீனா முதன் முறையாக போர் பயிற்சியில் இறங்கியுள்ளது.

இது குறித்து இருநாட்டு தரப்பிலும் கூறியதாவது; இருநாடுகளிடையேயான நட்புணர்வு அடிப்படையிலும் இருநாட்டு இராணுவத்தினருக்கு பயன்கிடைக்கச் செய்வதே பயிற்சியின் நோக்கமாகும் என தெரிவித்தனர். இந்த 2011 ஆம் ஆண்டை பாக் - சீனாவின் நட்புறவு ஆண்டாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த, கருத்தற்ற பேச்சாளர்கள் பேச்சை வளர்த்துக்கொண்டே போவர்.
– மான் டெஸ்க்கியூ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பது தமிழர்களுக்கே பாதகமாக அமையும்

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் மூன்றாவது பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. இப்பேச்சுவார்த்தை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானதெனக் கூறப்பட்டாலும் பேச்சுவார்த்தையின் வேகம், அதன் முடிவுகள், அந்த முடிவுகளை வெளிப்படுத்துவதில் உள்ள மந்தநிலை என்பன இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை போல தெரியவில்லை.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானதென்னும் நம்பிக்கை கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பன்னிரெண்டு உள்ளூராட்சி சபைகளில் வெற்றியடைவதற்கான காரணங்களில் முதன்மையானதெனலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசுடன் பேசுவதற்கான பலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்க வேண்டுமெனத் தமிழ் மக்கள் நினைக்கின்றனர். அவர்களின் நினைப்பு நியாயமானது.

ஆனால் நடைபெறும் பேச்சுவார்த்தை உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடையதா அல்லது இருதரப்பும் இடையிடையே சந்தித்து பொதுவான விவகாரங்கள் குறித்துப் பேசுவதற்கானதா என்பதில் தெளிவு தேவை.

பேச்சுவார்த்தை தொடர்பில் முழுமையான தெளிவை ஏற்படுத்தும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே இருக்கிறது. பேச்சுவார்த்தையின் நகர்வு, அரசின் நோக்கம், தீர்வுத் திட்டங்கள் பற்றிய எல்லைக்குள் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கின்றதா? என்பதைத் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தும் தார்மிகப் பொறுப்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்குரியது. எனினும் அவர்கள் பேச்சுவார்த்தை தொடர்பில் மந்தமாகவே கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்களின் மந்தமான கருத்துத் தெரிவிப்பானது பேச்சுவார்த்தையின் பலவீனத்தை வெளிப்படுத்துவதாகும்.

எதுவாயினும் பேச்சுவார்த்தையின் நகர்வு, அரசின் நிலைப்பாடு, காலத்தை நீடிப்பது என எதுவுமே தமிழ் மக்களுக்குச் சாதகமானதல்ல.

இந்த உண்மையை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பணியாகும்.

இதைவிடுத்து பேச்சுவார்த்தை நடிப்பது போன்ற தோற்றத்தைத் தக்கவைக்கும் நோக்கில் யார் செயற்பட்டாலும் அதன் பாதக விளைவு அப்பாவி தமிழ் மக்களுக்கென்பது உணர்தற்குரியது.

# இடைநிறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது

இடைநிறுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்த தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இந்த தேர்தல்கள் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதங்களில் இடம் பெறும் என தேர்தல் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இடம் பெறும் பிரதேசங்களைச் சார்ந்த 34 உள்ளூராட்சி சபை தேர்தல்களும் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 34 உள்ளூராட்சி சபை களினதும் நிர்வாக காலம் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி நிறைவடைகின்றன.

இதுதவிர ஏனைய 65 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைய பிற்போடப்பட்டிருந்தன.

65 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் கள் தொடர்பான இறுதி நீதிமன்ற தீர்ப்பு இந்த மாத இறுதியில் வெளியாகும் என எதிர்பார்க் கப்படுவதாக தேர்தல்கள் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

எஞ்சிய இரண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கண்ணிவெடி அகற்றும் பணி காரணமாக ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஜோர்தானில் சித்திரவதைக்குள்ளான மற்றொரு பணிப்பெண் நாடு திரும்பினார்

ஜோர்தானில் தொழில் தருநரினால் கடுமையாக தாக்கப்பட்ட இலங்கை பணிப்பெண் ஒருவர் நாடு திரும்பியுள்ளார்.

நடராஜா ராஜேஸ்வரி என்ற பணிப் பெண்ணே கடும் காயங்களுடன் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக தெரியவருகிறது.

இவர் தொழில் தருநரினால் தாக்கப்பட்டு, கடுமையான காயங்களுடனும் பார்வையில் குறைபாடுடன் தற்போது மருத்துவமனையில் விசேட பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

டுபாயில் பணிப்பெண்களாக பணியாற்றி வருபவர்களில் 50 க்கும் மேற்பட்டவர்கள் ஒவ்வொரு மாதமும் தமது தூதுவராலயங்களில் சரணடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் தருநரினால் உரிய முறையில் நடத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் தூதுவராலயங்களில் அடைக்கலம் கோருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இலங்கை, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த பணிப்பெண்கள் தாம் சரீர ரீதியாகவும் பால் ரீதியாகவும் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்படுவதாக குற்றம்சாட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# 20 ஆயிரம் பேர் ஜப்பானில் பலி

ஜப்பானில் கடந்த 4ஆம் திகதி ஏற்பட்ட 9.1 ரிச்சட் அளவிலான பாரிய பூகம்பம் மற்றும் சுனாமியினால் பலியானோர் மற்றும் காணாமல்போனோரின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடந்துள்ளதாக ஜப்பானிய தேசிய பொலிஸ் முகவரகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதுவரை 8133பேர் உயிரிழந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 12 ஆயிரத்து 272 பேரைக் காணவில்லை என அம்முகவரகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய மியாகி பிராந்தியத்திலேயே அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அங்கு 4 ஆயிரத்து 882பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை 15 ஆயிரம் சடலங்கள் வைத்திருப்பதற்குத் தேவையான வசதிகள் தேவைப்படும் என மியாகி பிராந்திய பொலிஸ் உயரதிகாரி நவோட்டோ தகுவெச்சி தெரிவித்துள்ளார். (ஞ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு.இம்மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம்.ஆனால் நீ தீமையையும் காண்பாய்.தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத்தனம்.

எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.பண்டைய மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன.புதியமதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்கின்றது.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்த உடனே அழிவு வருகிறது.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நாம் பிறரை மன்னிக்கும்போது, இறைவன் நம்மை மன்னிக்கின்றார் (லூக் 6:36-38)

கொடுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள்? என்னும் ஆண்டவரின் அமுத மொழிகள், பொருளை, செல்வத்தைக் கொடுப்பதை, பகிர்வதை மட்டும் குறிப்பிடவில்லை. அதற்கு முந்திய வரிகள் மன்னிப்பைப் பற்றிப் பேசுவதால், மன்னிப்புக் கொடுப்பதற்கும் பொருந்தும் என்று எடுத்துக் கொள்ளலாம். லூக்கா நற்செய்தியில் வருகின்ற முக்கியமான கருப்பொருட்களில் ஒன்று "மன்னிப்பு" என்பதாகும். இயேசுவின் போதனைப்படி மன்னிப்பு வழங்குவது கடவுளின் உயர்ந்த பண்பு. இதையே லூக்கா "இரக்கம்" என விளக்குவார். இயேசு,"உங்கள் வானகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36) என்று போதித்தார். மன்னிப்பு என்பது அன்பின்சிறப்பானவெளிப்பாடு எனலாம்.

கடவுளைப் போல மனிதர் இரக்கம் கொண்டிருப்பது இயலுமா என்னொரு கேள்வி எழலாம். கடவுள் எல்லையற்ற அன்பும் இரக்கமும் உடையவர். மனிதர் எவ்வளவுதான் முயன்றாலும் கடவுளுக்கு நேரான விதத்தில் அன்பு காட்ட அவர்களால் இயலாது. எனினும் மனிதருக்கே உரிய விதத்தில் நிறைவான அன்பையும் மன்னிப்பையும் நம் வாழ்வில் வெளிப்படுத்த நாம் அழைக்கப்படுகிறோம்.


மன்னிப்பு என்பது கடவுளிடமிருந்து நாம் பெறுகின்ற கொடை. நாம் பெறுகின்ற கொடையைப் பிறரோடு பகிர்ந்து கொள்வது தேவை. எனவே, கடவுள் நம்மை மன்னிப்பது போல நாமும் பிறரை மன்னிக்க முன் வந்தால், கடவுளின் நிறைவை நம் வாழ்வில் அடைந்திடவும் இறைவன் நம்மை மன்னிக்கின்றார் என்பதையும் நாம் அறிவோம். இயேசு கற்பித்த மன்றாட்டிலும், இயேசு அவ்வாறு செபிக்க நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். இன்றைய வாசகத்தின் வழியாக மன்னிப்பினால் நாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறோம் என்னும் செய்தியை ஆண்டவர் நமக்குத் தருகிறார். நாம் பிறருக்கு மன்னிப்பை வழங்கும்போது பிறரும், இறைவனும் அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும் படியாக நன்றாக அளந்து ஆசீர்வாதங்களை நம் மடியில் போடுவார்கள்.

ம. பிரான்சிஸ்,
சுதந்திர சுதந்திர, பத்திரிகையாளர்.

எனவே, இத்தவக்காலத்தில் யாருக்கெல்லாம் நமது மன்னிப்பு தேவைப்படுகிறதோ, அவர்களையெல்லாம் மனமார மன்னிப்போம். அவர்களை ஆசீர்வதிக்க இறைவனிடம் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் போரில் மகாஜனக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் வெற்றி




படங்கள்:-பாலமுரளி

வீரர்களின் போரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான 11ஆவது வருட இரண்டு நாள் இன்னிங்ஸ் போட்டி நேற்று முன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 267 ஓட்டங்களை எடுத்தது.

இதில் எஸ்.கபிலன் 104 ஓட்டங்களையும் அணித்தலைவர் எஸ்.கோகிலன் 64 ஓட்டங்களையும் குவித்து அசத்தினர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிசார்பாக வி.ஜீவிசன் 4 விக்கெட்டுக்களையும் கே.புருஷோத்மன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 78 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதில் றொபேட் நிஷான் 22 ஓட்டங்களையும் ரி.சிந்துஜன் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பாக எஸ்.கோகிலன் 5 விக்கெட்டுக்களையும் கே.மோசிகீரன் 3 விக்கெட்டுக்களையும் கே.டிலக்சன் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை பொலோன் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுமாறு மகாஜனக் கல்லூரி அணி அழைத்தது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 56.5 ஓவர்களில் 165 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் துணிச்சலாகப் போராடிய கே.துபீசன் 160 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களையும் மற்றும் கே.புருஷோத்மன் 20 ஓட்டங்களையும் கே.றொபேட் நிஷான் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பாக அணித்தலைவர் எஸ்.கோகிலன் 4 விக்கெட்டுக்களையும் எஸ். டிலக்சன் கே. வைகுந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கே.மோசிகீரன், எஸ்.சுஜித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த அணித்தலைவர் எஸ். கோகிலன் ஆட்டநாயகன், சிறந்த சகலதுறை வீரர், சிறந்த பந்துவீச்சாளர் ஆகிய மூன்று விருதுகளை வென்றார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக சதமடித்த கே.கபிலனும் சிறந்த களத்தடுப்பாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் தலைவர் கே.புருஷோத்மனும் தெரிவானார்கள்.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

## ஹரிவதனன் அபாரம்

வடக்கின் மாபெரும் போர் அணிகள் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 50 ஓவர் போட்டி புதுப்பொலிவுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது. வெள்ளை பந்து மற்றும் சைட் ஸ்கிறீன் இப்போட்டியின் போது யாழ். மண்ணில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது தொடக்கம் முதல் விக்கெட்டுக்களை இழந்து ஓட்டம் சேர்க்க திணறியது.

அணித்தலைவர் எடின், உபதலைவர் ஜெரிக் ஆகியோர் அணியினை காப்பாற்ற போராடினர். எனினும் அவர்களின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பலமிழந்தது.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 46.3 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜெரிக் துஷாந், எட்வேட் எடின், கோகுலன் முறையே 23, 22, 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் விமல்ராஜ் 4 விக்கெட்டுக் களையும், சத்தியேந்திரன் 3 விக்கெட்டுக்களையும், ஹரிவதனன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி முதல் 4 விக்கெட்டுக்களையும் இழந்தது. ஹரிவதனன் மற்றும் அணித் தலைவர் விதுசன் ஆகியோர் அணியினை வெற்றிப் பாதை நோக்கி அழைத்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்களத்தடுப்பு மோசமாக அமைய பிடியெடுப்புக்கள் அடுத்தடுத்து தவறவிடப்பட சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றி உறுதியானது.

5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் ஹரிவதனன் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும், விதுசன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக வதூஸனன், ஜெரிக் துசாந்த் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றி நாயகன் ஹரிவதனன் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# சதமடித்து ஜொலித்தார் யுவராஜ் சிங்

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது இந்தியா

யுவராஜ் சிங்கின் சகலதுறை ஆட்டம் கைகொடுக்க இந்திய அணி 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் இந்திய அணி 'பி' பிரிவில் இரண்டாவது அணியாகக் காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் இந்தியா, அவுஸ்திரேலிய அணியை எதிர்வரும் 24ஆம் திகதி சந்திக்கின்றது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற 4ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 'பி' பிரிவைச் சேர்ந்த இந்திய- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இப்போட்டியில் இந்திய அணியில் சேவாக், நெகரா நீக்கப்பட்டு ரெய்னாவும் அஸ்வினும் சேர்க்கப்பட்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் கிறிஸ் ஹயில், கீமர் ரோச்சிற்கு ஓய்வு வழங்கப்பட்டு கிரிக் எட்வேட்ஸ், ரவி ராம்போல் இடம்பெற்றனர். இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணிக்கு சச்சின் டெண்டுல்கர் 2 ஓட்டங்களுடன் ராம்போலின் வேகத்தில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

அடுத்து காம்பீருடன் இணைந்த ஹோலி சிறப்பான ஆட்டத்தை வழங்கினார். இதில் காம்பீர் 26 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 8.3 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி- யுவராஜ் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கியது.

இதில் யுவராஜ் சிங் கொடுத்த சுலபப் பிடிகளை சமி தவறவிடத்துக் கடந்தது.

இந்த ஜோடியின் அனுபவ ஆட்டத்தினால் இந்திய அணி 20.4 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் யுவராஜ் சிங், பிஷோவின் சுழலில் வரிசையாக இரண்டு பவுண்டரிகளை விளாசி 60 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் விராட் ஹோலியும் 64 பந்துகளில் அரைச்சதம் பெற இந்திய அணி 28.2 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 23.5 ஓவர்களில் 122ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது விராட் ஹோலி 76 பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 59ஓட்டங்களை எடுத்து ராம்போலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய தோனி நிதானமாக ஆட மறுமுனையில் யுவராஜ் சிங் 112பந்துகளில் உலகக் கிண்ண அரங்கில் தனது முதலாவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இது அவரது 13ஆவது ஒரு நாள் போட்டி சதமாகும்.

இந்த ஜோடி 45 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் தோனி 22ஓட்டங்களுடன் பிஷோவின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரெய்னா 4 ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் அரங்கு திரும்பினார்.



தொடர்ந்து யூசுப்பதான் களமிறங்க மறுமுனையில் யுவராஜ் சிங் 123 பந்துகளில் (10பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 113 ஓட்டங்களை எடுத்து பொல்லார்டின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின் வரிசையில் பதான் 11, ஹர்பஜன் 3, சகீர்கான் 5 ஓட்டங்களுடனும் பட்டேல் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 268 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ரவி ராம்போல் 10 ஓவர்கள் பந்துவீசி 51 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ரசேல் 2 விக்கெட்டுக்களையும் சமி, பொல்லார்ட், பிஷோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 269 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு சிமித்-எட்வேட்ஸ் ஆரம்பம் வழங்கினர்.

சுழல் பந்துவீச்சுக்கு சாதகமான சென்னை மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிர்ச்சியளிக்க ஆட்டத்தின் முதலாவது ஓவரிலேயே இந்திய அணித்தலைவர் தோனி சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினை அழைத்தார்.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எட்வேட்ஸ் 17 ஓட்டங்களை எடுத்து அஸ்வினின் சுழலில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவ் வாட்டமிழப்பை கள நடுவர் மறுக்க, மீள் பரிசீலணை முறையில் ஆட்டமிழப்பை உறுதி செய்தனர் இந்திய அணியினர்.

அடுத்து களமிறங்கிய டரன் பிரவோ 22 ஓட்டங்களுடன் ரெய்னாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த சர்வான் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் சிமித் 64 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 63 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது டேவன் சிமித் 97 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 81 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

பின் வரிசையில் பொல்லார்ட் ஒரு ஓட்டம், தோமஸ் 2, அணித்தலைவர் சமி 2 ஓட்டங்களுடனும், ரசேல் பூச்சியத்துடனும் ஆட்டமிழந்தனர்.

நிதானமாக ஆடிய சர்வான் 68 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்தில் ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 43 ஓவர்களில் 188 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதன்மூலம் இந்திய அணி 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 'பி' பிரிவில் இரண்டாவது அணியாக காலிறுதிக்கு முன்னேறியது.

பந்துவீச்சில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும், அஸ்வின், யுவராஜ் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த யுவராஜ் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### சச்சினின் நேர்மை

நேற்று தனது 450ஆவது ஒரு நாள் போட்டியில் பங்கேற்ற இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட்டில் 100ஆவது சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார். ரவிராம்போல் வீசிய பந்து டெண்டுல்கரின் துடுப்பின் கீழ்ப்பிடியில் பட்டுச் சென்றது. பந்தைப் பிடித்த விக்கெட் காப்பாளர் தோமஸ் ஆட்டமிழப்பு கேட்டார். ஆனால் நடுவர் ஸ்டீவ் டேவிஸ் மறுத்தார்.

எனினும் மனச்சாட்சிப்படி செயற்பட்ட டெண்டுல்கர் நடுவரின் முடிபுக்குக் காத்திருக்காமல் அரங்கு திரும்பினார்.

## காலிறுதியில் யார்-யார் மோதல்?

| திகதி | அணிகள் | மைதானம் |
|---|---|---|
| மார்ச் 23 நேரம் : 2.00 | பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத் தீவுகள் | மிர்பூர் |
| மார்ச் 24 நேரம் : 2.30 | அவுஸ்திரேலியா எதிர் இந்தியா | அகமதாபாத் |
| மார்ச் 25 நேரம் : [illegible] | நியூசிலாந்து எதிர் தென்னாபிரிக்கா | மிர்பூர் |
| மார்ச் 26 நேரம் : 2.30 | இலங்கை எதிர் இங்கிலாந்து | கொழும்பு |

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +0.758 |
| இலங்கை | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +2.582 |
| அவுஸ்திரேலியா | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +1.123 |
| நியூசிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | +1.135 |
| சிம்பாவே | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | +0.030 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | -3.042 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +2.026 |
| இந்தியா | 6 | 4 | 1 | 1 | 0 | 9 | +0.900 |
| இங்கிலாந்து | 6 | 3 | 2 | 1 | 0 | 7 | +0.072 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +1.066 |
| பங்களாதேஷ் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -1.361 |
| அயர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.696 |
| நெதர்லாந்து | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | -2.045 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகள் கூட்டாக...

பிரித்தானிய, பிரெஞ்சு தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. லிபியாவின் வான் பாதுகாப்புக் கட்டமைப்புகளை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகள் 2003ஆம் ஆண்டு ஈராக் மீதான படையெடுப்பின் பின்னர் அவை மற்றொரு நாட்டின் மீது மேற்கொண்ட மிகப்பெரிய படையெடுப்பு இதுவாகும்.

ஈராக் படையெடுப்பு ஆரம்பித்து சரியாக 8 வருடங்கள் பூர்த்தியாகும் தினத்தில் லிபியா மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கையானது நீண்டகால யுத்தத்திற்கு வழிவகுக்கும் என லிபியத் தலைவர் கேணல் கடாபி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரெஞ்சு விமானம் தாங்கிக் கப்பலான சார்ள்ஸ் டிகோலில் லிபியா மீதான தாக்குதல்களுக்காக பிரான்ஸின் தென்பகுதி துறைமுகமான டௌலோனிலிருந்து நேற்று புறப்பட்டதாக பிரெஞ்சு கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இக்கப்பல் லிபியாவை அடைவதற்கு 36-48 மணித்தியாலங்கள் செல்லும்.

இந்நிலையில் லிபியாவுக்கு எதிராகக் கட்டாரும் இணைந்து கொள்ளவுள்ளதாகக் கட்டார் பிரதமர் ஷேக் ஹமட் பின் ஜாஸிம் அல் தானி தெரிவித்துள்ளார். லிபியா மீதான தாக்குதலில் பங்குபற்றவுள்ள முதல் அரபு நாடு கட்டார் ஆகும். (ந-5)


## மலேசியாவில் UK Degrees

Legenda Education Group

25 வருட அனுபவம்
5 மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள்
40 நாடுகள் – 5,000 நண்பர்கள்

Edexcel International - UK, University of East London - UK, Coventry University - UK, Thompson Rivers University of Canada

64க்கும் மேற்பட்ட Foundation, Diploma, HND, Degree & Masters Programs

Engineering
Accounting & Finance
Computer Science & Information Technology
Medical Science
Business
Quantity Surveying & Construction
Visual Arts
Architecture

குறைந்த செலவு ! இலகுவில் விசா!! IELTS அவசியமில்லை!!!
படிக்கும்போதே / படித்து முடித்ததும் UK செல்லலாம்

இலவச கருத்தரங்கு & நேரடிச் சந்திப்பு
பல்கலைக்கழக நேரடிப் பிரதிநிதி சஜீப்

மார்ச் 21,22 திங்கள், செவ்வாய் பிற்பகல் 2 மணி
இடம்: தியாகி அறக்கொடை நிலையம்
527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

மார்ச் 22 செவ். 10 மணி
இடம்: சிகரம் ஊடக இல்லம்

★ Spot Admission ★ O/L , A/L உடன் UK Degree

Mr.Sajeeb
Director (Sales & Marketing)
Legenda Education Group
Mobile: +6016-235 5640
Email: sajeebv@legendagroup.edu.my

Legenda Persiaran UTI Bandar Universiti Teknologi Legenda (BUTL), Batu 12 71700 Mantin, Negeri Sembilan, Darul Khusus West Malaysia. Tel: +606-758 6909 Fax: +606-758 2150 Web: www.jati.edu.my

வட மாகாணத்துக்கான ஏக முகவர்:
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
முன் பதிவுகளுக்கு : 021-300 80 60, 0773 616 798
MEDIA

இருக்கும் பணத்துடன் இங்கிலாந்துப் பட்டம் & பயணம்

JIFFAds


# மரண அறிவித்தல்

## திருமதி திருநாவுக்கரசு செல்லம்மா



புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் மாரியம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு செல்லம்மா நேற்று முன்தினம் 19.03.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை அவர்களின் மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் கதிராசிப்பிள்ளை அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (சுந்தரம்பிள்ளை) பதுளை வர்த்தகர் அவர்களின் அன்பு மனைவியும் திருவருட்செல்வி (லண்டன்), செல்வரதி (சுவிட்சர்லாந்து), செல்வமலர் (கனடா), செல்வராணி (ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவபிரகாச வித்தியாசாலை), சிவதாசன் (கரசன் எலக்றிக்கல்ஸ் யாழ்ப்பாணம்), செல்வநிதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகநாதன் (லண்டன்), தர்மபாலன் (சுவிட்சர்லாந்து), யோகலிங்கம் (கனடா), கிருஸ்ணபாலா (யாழ்ப்பாணம்), தவச்செல்வி சண்முகதாஸ் (கனடா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, துரைச்சாமி மற்றும் நாகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மங்கையற்கரசி, தையல்நாயகி மற்றும் தங்கரத்தினம் (அமெரிக்கா), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் நந்தினி, ராஜசீலன், பாணு, கிருபாகரன், ஆனந்தசோபன், கார்த்திகா, பாலரமேஸ், துஷாயினி, கோபிராஜ், கீர்த்திகா, கிரிபிரசாத், சஜித்திரா, தர்சிகன், பஜிதன், கவிரதன், சுவானிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கீரன், ராகவி, ரூபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வைமன் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் 21.03.2011 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

62A / 4 வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: (மகன்) லயன் சிவதாசன்
(கரசன் எலக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்).
கிருஸ்ணபாலா (மருமகன்)

(4099)

# உள்ளூராட்சி அதிகா...

கொண்டிருக்கும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியை பிரதேச அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தீர்மானிப்பதிலும் இச் சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாத தருணத்தில் அத்திட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கான அதிகாரமும் இச் சபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கு கிராமங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டமானது மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் செயலாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் எதிர்க்கட்சிகள் கைப்பற்றியுள்ள மாகாண, உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# நவநீதம்பிள்ளை...

விடுத்ததாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் பங்கேற்க சென்று குழுவுக்குத் தலைமையேற்ற சேனுகா செனவிரத்ன தெரிவித்தார். இதையடுத்து அவர் ஏப்ரல் மாதம் இலங்கை வரவுள்ளதாக சேனுகா செனவிரத்ன கூறினார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் வடக்கில் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வு குறித்து நவநீதம்பிள்ளை நேரில் அவதானிக்கவுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் 11 உள்ளூர் மற்றும் அனைத்துலக உதவி நிறுவனங்கள் கையளித்த முறைப்பாட்டில் இலங்கை அரசாங்கம் வடக்கில் படைமுகாம்களில் பொதுமக்களை தடுத்து வைத்துள்ளதாகவும் வடக்குப் பகுதியில் இராணுவ ஆட்சி நடத்தப்படுவதாகவும் போருக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டியிருந்தன. இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது பயணத்தின் போது ஆராயவுள்ளார். (ந-5)

# பிரதமர் பதவிப் போட்டி...

குடும்பத்தில் ஒருவருக்கே வழங்க ஜனாதிபதி முடிபெடுத்தால் அதற்கெதிராகப் போர்க்கொடி தூக்க அவர்கள் தயாராகி வருகின்றனர். அதற்காக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் அவர்கள் பல கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

ஆயினும் பிரதமர் பதவியை ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளதாக அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கோ பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்றும் அத்தகவல்களிலிருந்து மேலும் அறியக்கிடைத்துள்ளது.

எது எப்படியான போதிலும் ராஜபக்ஷ பரம்பரையிலிருந்து ஒருவர் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் ஆளும்கட்சிக்குள் கிளர்ச்சியொன்றுவெடித்து இரண்டாக உடையும் அபாயம் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ந-5)

# ஒத்திவை...

ஏனைய 65 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் நீதிமன்றத்தீர்ப்பிற்கமைய பிற்போடப்பட்டிருந்தன.

65 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான இறுதி நீதிமன்றத் தீர்ப்பு இந்த மாத இறுதியில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

எஞ்சிய 2 உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கண்ணிவெடி அகற்றும் பணி காரணமாக ஒத்திவைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஜனாதிபதி மகிந்த...

தேர்தலை புறக்கணிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்ததன் மூலம் அவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவதை தவிர்ப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவை ஒதுக்கித்தள்ள தீர்மானித்தமைக்கு ஆதாரமாகும் என இலங்கை, பங்களாதேஷ், பர்மா ஆகிய நாடுகளுக்கான இந்தியாவின் இணைச் செயலாளர் மோகன் குமார் தெரிவித்திருந்ததாக அக்கேபிள் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி வேட்பாளரின் கடும்போக்கு பிரசாரத்திற்கு மத்தியிலும் ராஜபக்ஷ ஒரு மிதவாதியாக இருப்பார் எனவும் சமாதானமும் இல்லை, யுத்தமும் இல்லை என்ற நிலை அண்மைய எதிர்காலத்தில் தொடர்வதற்கான வாய்ப்பிருப்பதாகவும் மோகன் குமார் ஊகம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய முயற்சிக்கும் நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடையாதிருப்பதை உறுதிப்படுத்துவதே தேர்தலுக்குப்பின் இந்தியா முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயம் எனவும் இது அமெரிக்காவின் நோக்கங்களுக்கு அமைவாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார் எனவும் விக்கிலீக்ஸ் வெளியிட்ட கேபிள் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## எழுத்தாளர்களுடனான சந்திப்பு

தமிழ் மக்களின் இன்றைய தேவையை மையப்படுத்திய ஆக்க இலக்கியப் படைப்புக்கள் மற்றும் சமூக, பொருளாதார, அறிவியல் படைப்புகள் என்பவற்றுக்கான களம் அமைக்கும் நோக்குடன் எழுத்தாளர்களுடனான சந்திப்பொன்றை உங்கள் வலம்புரி நாளிதழ் ஏற்பாடு செய்துள்ளது.

இச் சந்திப்பை ஒழுங்குபடுத்துவதற்கு வசதியாக கலந்து கொள்ளவிருக்கும் எழுத்தாளர்களின் பெயர் விபரங்களை வலம்புரியின் எழுத்தாளர் அவை பதிவுசெய்யவுள்ளது. எனவே எழுத்தாளர்கள் (இளம் எழுத்தாளர்கள் உட்பட) தங்கள் முழுப் பெயர், தபால் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விபரங்களை,

"எழுத்தாளர் அவை"
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எழுத்தாளர் அவை,
வலம்புரி.


## கண்ணா கிளினிக்

சிவன் கோவிலடி சித்தன்கேணி

வேலை ஆள் தேவை

உதவியாளர் (பெண்)

கல்வியறிவுடையவர்கள்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சித்தன்கேணி எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0776028734

(சி-2744)

## புதிய பிரிவு

A/L 2013
(கலை, வர்த்தகம்)

ஆரம்பம்:
மார்ச் 26 (சனி) காலை 8 மணி

DMI
Jaffna

(சி-2743)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org